ஸ்ரீ:

ஸ்ரீ சௌரிராஜப் பெருமாள் தேவஸ்தானம்,
திருக்கண்ணபுரம்.

☆

# திருக்கண்ணபுரத் 'தல' வரலாறு.

☆

தொகுத்தவர்:
நியாய-மீமாம்ஸா சிரோமணி
ஸ்ரீ T. K. முத்துஸ்வாமி சாஸ்திரிகள்,
திருவெண்காடு.

☆

தேவஸ்தான வெளியீடு.

1963

12756

இம்பீரியல் பிரஸ், உடுமலைப்பேட்டை



உத்பலாவதக விமானம்



ஸ்ரீ சௌரிராஜன்

# திருக்கண்ணபுரத் 'தல' வரலாறு.

தொகுத்தவர் :

நியாய-மீமாம்ஸா சிரோமணி

**திருவெண்காடு, T. K. முத்துஸ்வாமி சாஸ்திரிகள்.**

# விஷய விபரம்


1. முன்னுரை
2. திருக்கண்ணபுரமும் அதன் எல்லையும்
3. கருடபர்வதமும் பெரிய திருவடியும்
4. இந்திரனுக்கு பிரம்மஹத்தி தோஷம் நீங்கிய வரலாறு
5. விகடாக்ஷனை ஆழியால் வீட்டிய பக்தாதங்கஹரர் அல்லது பயாரி
6. நித்ய புஷ்கரிணீ
7. உத்பலாவதகம்
8. திருக்கண்ணபுரம்
9. பூதாவடம் தீர்த்தம்
10. அனந்தபில தீர்த்தம்
11. முக்தாகரம்
12. வசுவிற்குச் சாபமும் பெருமாள் திருவருளும்
13. பத்மினீ திருமணம்
14. திருமணிக்கட்டிலே தோள்வளை
15. அஷ்டாக்ஷரமந்த்ர ஸ்வரூபியே ஸ்ரீசௌரிராஜப் பெருமாள்

# விஞ்ஞாபனம்.

அன்புடையீர் !

நூற்றெட்டு திவ்யத்திருப்பதிகளிலே ஒன்ருக எண்ணப்படுவதும், திருக்கண்ணபுரம், திருக்கண்ணங்குடி, திருக்கண்ண மங்கை, திருக்கண்ணன் கவித்தலம், திருக்கோவிலூர் என்ற "பஞ்ச கிருஷ்ண க்ஷேத்திரங்களில் ஒன்ருக புகழப்படுகின்றதும், "மரணமானல் வைகுந்தம் கொடுக்கும் பிரான் அரணமைந்த மதிள்சூழ் திருக்கண்ணபுரத்துள்ளான்" என்று நம்மாழ்வார் பாடிப்போற்றிய சௌரிராஜப் பெருமாள் கிழக்கு நோக்கிய திருமுகத்துடன் அமர்ந்திருக்கும் திருக்கண்ணபுரமென்ற இத் திருத்தலத்தின்கண் அமைந்த "உத்பலாவதகம்" என்ற பெருமாள் உறையும் விமானம் மிகப் பெருமையுடையதாகும். பலம் என்ருல் மாமிசம். தவத்தினல் அது சுருங்கப்பெற்றவர் "உத்பலர்" எனப்படுவர். அவர்கள் சரீராபிமானத்தை உதறித்தள்ளியவர்களான உத்தமர்கள். அவர்களைக் காக்கின்ற பெருமாள் வீற்றிருக்கும் விமானம் "உத்பலாவதகம்" என்றழைக்கப்படுகிறது. அதன்கண் அமர்ந்த பெருமாளின் திவ்யத் திருக்கோலத்தைக் கண்டு "கருவரைபோல் நின்ருனை கண்ணபுரத் தம்மானை" என்று போற்றிப்புகழ்ந்தார் திருமங்கை மன்னன். இவர் சிய்யாழி தாலூகாவில் திருவாலி திருநகரியில் பெருமாளின் சார்ங்கத்தின் அவதாரமாகத் தோன்றியவர். இத்திருமங்கை மன்னனுக்கு திருவெட்டெழுத்தை ஸ்ரீ ரங்கனதர் உபதேசித்தருளிய கதை தெரிந்ததே. ஆயினும் அவருக்கு அஷ்டாக்ஷர மந்திரார்த்தத்தை கண்ணபுரத்தெம்மான்தான் உபதேசித் தருளினர் என்பர் பெரியோர். இவர்தம் பெருமையை நூறு திருப்பாசுரங்களால் மனமாரத் துதித்திருக்கின்ருர் திருமங்கை மன்னன்.

உடுமலைக்கு நான் நாராயண கதை கூற வந்தபோது, சௌரிராஜன் திருத்தொண்டில் திளைந்து பிரதிதினமும் கண்ணபுரத்திலே அடியார்களுக்கு அமுதூட்டுபவரும், பெருமாளிடம் அளவற்ற அன்பு பூண்டவரும், பண்பு மிக்க பெரும் பரம்பரையில் உதித்தவருமாகிய நண்பர் **ஸ்ரீ சௌரிராஜ அய்யங்கார் ஸ்வாமி** B. A., அவர்கள் என்னிடம் நட்புரிமை பூண்டு வடமொழியிலுள்ள இத்தல வரலாற்றை தமிழில் சுருக்கி எழுதித்தருமாறு பணித்தார்கள். பெருமாளின் திருவருள் துணைசெய்ய இத் தொண்டை முடிந்தவரையில் செய்திருக்கிறேன். இப்பணியில் என்னைத்தூண்டிய **ஸ்ரீ சௌரிராஜ அய்யங்கார் ஸ்வாமிக்கு** என் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். தேவஸ்தான தர்மக்கர்த்தாக்களுக்கும், நிர்வாக அதிகாரிக்கும், இதை நன்கு அச்சிட்டு உதவிபுரிந்த இம்பீரியல் பிரஸ் நிர்வாகஸ்தர்களுக்கும் என் நன்றி உரித்தாகுக. இந் நூலைப் படித்து இஹபரலாபங்கள் பெற்று உய்யுமாறு பாகவதோத்தமர்களை வேண்டிக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம் தங்கள்.

**T. K. முத்துஸ்வாமி சாஸ்திரி,**
திருவெண்காடு.

ஸ்ரீ



# திருக்கண்ணபுரம் திவ்யக்ஷேத்ரம்.

| | | |
|---|---|---|
| பெருமாள் திருநாமம் | : | ஸ்ரீ சௌரிராஜன் |
| தாயார் திருநாமம் | : | ஸ்ரீ கண்ணபுர நாயகி |
| புஷ்கரிணி | : | நித்ய புஷ்கரிணி |
| விமானம் | : | உத்பலாவதக விமானம் |

பெருமை வாய்ந்த இந்த ஸ்தலம், ஆழ்வார்களுள்,

நம்மாழ்வார், பெரியாழ்வார், குலசேகராழ்வார், திருமங்கையாழ்வார், ஆண்டாள் இவ்வைவரால் (பாடப்பெற்றதாகும்) மங்களாஸாஸநம் செய்யப்பெற்றதாகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| திருமங்கையாழ்வார் | – | பாடல்கள் | – | நூற்றைந்து |
| நம்மாழ்வார் | – | ,, | – | பதினொன்று |
| குலசேகராழ்வார் | – | ,, | – | பதினொன்று |
| பெரியாழ்வார் | – | பாடல் | – | ஒன்று |
| ஆண்டாள் | – | ,, | – | ஒன்று |

**சன்னதி அமைப்பு :**

திருக்கோயில் புராதனமானது (அறுபத்துநான்கு சதுர்யுகம் கொண்டவர் சௌரிப்பெருமாள்) கிழக்கு மேற்கில் 316 அடிகளும், தெற்கு வடக்கில் 210 அடிகளும் உள்ளன. பெரிய ராஜகோபுரம் 95 அடி உயரம் உள்ளது. ஏழுநிலை மாடங்கள் அமைந்தது. கோபுரத்தில் ஏறி நாற்புறமும் பார்த்தால் 10 கல் சுற்றளவில் உள்ள அனைத்தும் கண்ணுக்குப்புலப்படும். திருமலைராஜன் பட்டணத்தருகில் உள்ள கடலருகில் திருக்கண்ணபுர எம்பெருமானுடைய 7-வது பிரகாரம் இருந்திருக்கிறது. இத்திருக்கோயில் சப்த பிரகாரங்களைக் கொண்டதாகத் தெரியவருகிறது. பிரகாரங்கள் எல்லாம் ஒரு சோழ அரசனால் அழிக்கப்பட்டதால் தற்காலம் மேற்படி பிரகாரங்கள் கிடையா.

**நவக்கிரகம் :**

கோபுரத்தின் இடது பக்கத்தில் கோபுரம் ஏறும் இடத்திற்கு கிழக்கில் கோபுரச் சுவற்றில் மேற்குத் திசைநோக்கி நவக்கிரகச் சக்கரம் அவரவர்கள் ராசியுடன் கல்வெட்டில் பொரித்து பிரதிஷ்டை செய்திருக்கின்றனர். காலை மாலை ஆகிய இருவேளைகளிலும் "திருவாராதனம்" உண்டு.

**தாமோதரக் கண்ணன் சந்நிதி :**

கோபுரத்தின்கண் நுழைந்தவுடன் கோபுரத்தின் வலது பக்கத்திலுள்ள மேற்கு சுவற்றில் கிழக்கே திருமுக மண்டலம் நின்ற திருக்கோலம் தாமோதரக் கண்ணன் சந்நிதி. காலையிலும் மாலையிலும் திருவாராதனம் நடைபெறுகிறது: உத்ஸவர் தாமோதரக் கண்ணனும் கொ்ப்பக்கிரகத்தில் எழுந்தருளியிருக்கிறார்.

**பலிபீடம் :**

கோபுரவாயில் கடந்து உள் சென்றதும் முதலில் காணத்தக்கது "பலிபீடம்".

**கொடி மரம் :**

கெருடக் கொடி பறக்கும் துவஜஸ்தம்பம்.

**சிறிய கோபுரம் :**

இக்கோபுரம் மூன்று அடுக்குகள் உடையது. இதன் உயரம் 60 அடி.

**சிறிய பலிபீடம் :**

சிறிய கோபுரம் கடந்ததும் "சிறிய பலிபீடம்" காணத்தக்கது.

**கருடமண்டபம் :**

இது சிறிய கோபுரத்திற்கும், சிறிய பலிபீடத்திற்கும் மத்தியில் உடுமலைப்பேட்டை ஸ்ரீ வெங்கடேசமில்ஸ் நிர்வாகிகளால் கட்டிக் கொடுக்கப்பட்டது.

**நெற்களஞ்சியம் :**

சிறிய கோபுரத்தின் இடது புறமாக "நெற்களஞ்சியம்" அமைந்திருக்கிறது.

**ஆழ்வார் சந்நிதி :**

நெற்களஞ்சியத்தை அடுத்து சற்று முன்பு வடக்கிலிருந்து தெற்கில் உக்ரநரஸிம்மன், லெக்ஷ்மிநரஸிம்மன், பிள்ளை லோகாச்சாரியார், நாதமுனிகள், திருபாணாழ்வார், மதுரகவியாழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார், குலசேகராழ்வார், ஈம்மாழ்வார், மணவாள மாமுனிகள், திருமழிசையாழ்வார், பேயாழ்வார், பூதத்தாழ்வார், சிலாரூபமாகவும், உத்ஸவ மூர்த்திகளாகவும் மேற்கு முகமாக எழுந்தருளியிருக்கின்றனர். பெருமாள், தாயார் புறப்பாட்டின் போது ஆழ்வார்களுக்கு (மங்களாசாசனம்) சேவை (பிரபந்தம்) தொடங்குவது வழக்கம். ஒவ்வொரு ஆழ்வாரின் மாதத் திருநக்ஷத்திரங்களுக்கும் உபயம் நடைபெறுகிறது. பரமபத ஏகாதசியன்று ஆழ்வார்கள் அனைவரும் மங்களாசாசனம் செய்வார்கள்.

**முனியோதரன் பிள்ளை :**

ஆழ்வார் சந்நிதிக்கு வடக்கில் முனியதனயர் என்ற பக்தரின் சிறிய கோயில் இருக்கின்றது. முனியதரன் பிள்ளை, தஞ்சாவூர் அரசரிடத்து மந்திரியாயிருந்தவர். தன்மனைவி "விரகாதி போகம்" என்பவளால், கலத்தில் படைத்த 5 நாழி அரிசி, 3 நாழி பருப்பு, 2 நாழி நெய் இவைகளைச் சேர்த்துப் பக்குவம் செய்த "பொங்கல்" அன்னத்தை படைக்க, பிள்ளையவர்கள் இந்த அன்னம் ஸ்ரீ சௌரி ராஜப்பெருமானுக்கு அர்ப்பணம் என்று சொல்லி உண்டார். மறுநாட்காலை அர்ச்சகர் கோயிலின் திருக்காப்பு நீக்கியதும் "பொங்கல் அன்னம்" சிதறிக்கிடந்ததையும் பார்த்து, முனியதரன் பிள்ளை, தனது இல்லம் வரையில் சிதறியிருப்பதையும் கண்டு விபரம் முழுவதும் தெரிந்துகொண்டு பிள்ளையவர்களும் இப்பொங்கல் பெருமானுக்கு உவப்பானதென உணர்ந்து அன்றுமுதல் அர்த்தஜாமத்தில் முழுச்சேர்வையாக பொங்கல் அமுது செய்விக்கும்படி ஏற்பாடு செய்து அதற்கென "மாணியம்" விட்டதாகவும் கூறுவர். ஆனல் அன்ருடம் இப்பொங்கல் விற்பனைத் தொகையைக்கொண்டு நாள் தவருது நடந்து வருவது மட்டற்ற மகிழ்ச்சிக்குறியது. முனியதரன் பிள்ளையால் ஏற்பட்டதால் இப்பொங்கலுக்கு முனியோதரன் பொங்கல் என மருவி வழங்குகிறது. இப்பொங்கலை வாங்கி புசித்தவர்களுக்கு நோய் என்பது கிடையாது.

**திருமடப்பள்ளி :**

மேற்குப் பார்த்தது மடப்பள்ளியின் வாயில். தினம், வாரம், மாதம், வருட ஏறுபடிகளுக்கு தளிகை செய்யும் இடம் இத்திரு மடப்பள்ளி.

**விபிஷணுழ்வார் :**

இந்த சந்நிதி தெற்கு பிரகாரம் மதில் சுவற்றை ஒட்டியும் வடதிசை பார்க்க, விபீஷணுழ்வார் ஆராதனப் பெருமாளான ஸ்ரீ ரெங்கனுதப்பெருமாள்; ராமபக்தனை ஹனுமானுடனும் நின்ற கோலத்தில் திருவரங்கச் செல்வரான நம் பெருமாளின் நடை அழகை சேவிக்க விரும்பிய விபீஷணுழ்வாருக்கு பிரதி அமாவாசை தோறும் 'நமது நடையழகை கீழவீடான திருக்கண்ணபுரம் கண்டு களிப்பீராக' என அருளியபடி இன்றும் ஒவ்வொரு அமாவாசை தோறும் திருக்கண்ணபுரத்தலத்தில் ஸ்ரீ சௌரிராஜன் எழுந்தருளி விபீஷணுழ்வாருக்கும், பக்தகோடிகளுக்கும் சேவை சாதிக்கிருர். ஸ்ரீ ரெங்கனுதனும், ஸ்ரீ சௌரிராஜனும் ஒருவரே என தியானித்து கரம் கூப்பியபடி நிற்கின்ருர் விபீஷணுழ்வார்.

**அத்யயன மண்டபம் :**

விபிஷணழ்வார் சந்நிதியிலிருந்து வடக்கில்சென்று தாயார் சன்னதி வரையில் புதியதாக பத்தி உலா மண்டபம் கருங்கல்லால் நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றது. இம் மண்டபத்தில் பெருமாள், தாயார் எழுந்தருளும் பஞ்சபர்வ உத்ஸவங்களில் பத்தி உலாத்துதல், சேவா காலங்கள், திருவந்திக்காப்பு முதலியன நடைபெறும். இது மிகவும் விசேடமாய் இருக்கும். இம் மண்டபத்தை ஸ்தாபித்தவர் திருமலை – திருப்பதி கேள்வியப்பன் ஸ்ரீ உ. வே. திருவேங்கட ராமா னுஜன் பெரிய ஜீயர் ஸ்வாமி அவர்கள் ஆவர். இம்மண்டபத்தில் கல்யாணங்கள் நடைபெறுகின்றன. பத்தி உலா மண்டபம் எனவும் பெயர் வழங்குகிறது.

**நிலைக்கண்ணுடி சேவை :**

மேற்குப் பிரகாரத்தில் தெற்கு கடைசியில் கிழக்கு திக்கு பார்க்க, நிலைக்கண்ணுடி ஒன்று பதிப்பிக்கப் பெற்றிருக்கிறது. பெரு மாள், தாயார், பிராகாரத்தில் எழுந்தருளும்போது கண்ணுடியில் எம்பெருமானின் சேவை பக்தர்களுக்குக் கிடைக்கிறது.

**யாகசாலை :**

ஈசான்ய மூலையில் கிழக்கு சுவற்றில் மேற்கு திசை நோக்கி யாகசாலை அமைந்திருக்கிறது. உத்ஸவ காலங்களில் சாந்தீகம், பௌஷ்டீகம். முதலிய யாகாதி ஹோம கிரியைகள் ஆகம விதிப் படி செய்வார்கள்.

**உக்ராணம் :**

சற்று தெற்கில் தேவஸ்தான நித்ய படித்தர சாமான்கள் வைத்துக்கொள்ளும் உக்ராண அறை அமைந்துள்ளது.

**அலங்கார கட்டளை திருமடப்பள்ளி :**

உக்ராணத்திற்கு தெற்கில் இது அமைந்துள்ளது. இத்திரு மடப்பள்ளியில் சலிப்பேரியார் கட்டளை என்ற பெயரால் கைங் கர்ய பறரைக்கொண்டு அலங்கராத்தளிகை செய்து பெருமாளுக்கு அமுது செய்வித்தபிறகு நான்கு ஸ்வாமிகளுக்கு ததியாராதனம் செய்துவைக்கிருர்கள். சாப்பிடுவதற்கு என தனிக்கட்டிடம் அமைத் திருக்கிருர்கள். இக்கட்டளை இன்றும் நல்ல முறையில் நடந்து வரு கிறது.

**பெருமாள் சன்னதி :**

பத்தி உலா மண்டபத்தில் வடக்கிலுள்ள படிகளில் ஏறி பெரிய மண்டபம் வந்து மேற்கில் திரும்பினுல் பெருமாள் ஸன்னதி.

மகாமண்டபம் போகும் வாயில் இரு மருங்கிலும் ஜெய-விஜயாள் என்ற துவார பாலகர்கள் கம்பீரமாக சேவை சாதிக்கிறார்கள். இவர்களை வணங்கி உள்ளே செல்வோம். மகாமண்டபம் தாண்டி அர்த்தமண்டபம்.

**கர்ப்பக்கிரகம்:**— "கண்டவர்தம் மனம் வழங்கும் கண்ணபுரத்தமுதன்" காமனும் வெட்கமுறும்படி வடிவழகுடையவர். ஸ்ரீதேவி, பூதேவி, பத்மினி, ஆண்டாள், என்ற நான்கு தேவிகளுடன் நின்ற திருக்கோலத்துடன் பக்தர்களுக்கு காட்சிகொடுக்கிறார். ஸ்வர்ண கவசம் சாத்திக்கொண்டும் திவ்யாபாரணங்களை அணிந்து கொண்டும் இருக்கிறார். அகன்ற திருமார்புடையவர், திருப்பவளவாய் அழகர், பிரயோகச் சக்கரக்கையர், திருச்சங்கம் பொலியும் கையர், தாரை வாங்கும் தடக்கையர், எழிலுறு கரத்தினர், சிவிளிகை கச்சி இலங்கும் அரைச்சிவந்த ஆடையர், தண்டுவை மாலையர், அருள் வரதர்—பத்மாஸனத்தில் அழுத்திய திருவடிகளும் சர்வாங்க சுந்தரத்துடனும் எழுந்தருளியிருக்கிறார். வெள்ளி உலோகத்தால் உபய நாச்சிமார்களுடன் கண்ணபுரமுடையான் எழுந்தருளியிருக்கிறார். வெள்ளி உலோகத்தால் செல்வரும் சந்தானகிருஷ்ணனும், சக்கரத்தாழ்வாரும் எழுந்தருளியிருக்கின்றனர்.

உயர்தவங் காரணமாக உலர்ந்த சரீரம் உடைய முனிவர்கள் விமானத்தில் தபஸ்செய்கிறபடியால் உத்பலாவதக விமானம் எனப்பெயர். "கருவரைபோல் நின்றானை கண்ணபுரத்தானை" என்றபடி நீலமேகப் பெருமாள் (மூலவர்) சிலா ரூபமாக எழுந்தருளியிருக்கிறார். திருவேங்கடமுடையானுடைய சேவைபோலவே எழுந்தருளியிருக்கிறார். திருமண்ணுழிபிரதக்ஷிண பிரகாரம் உள்ளது.

## திருமஞ்சன மண்டபம் :

மஹாமண்டபத்தின் வடக்கு சுவற்றில் திருமஞ்சன மண்டபம் இருக்கிறது. ஸ்ரீ சௌரிப்பெருமாள் திருமஞ்சனம் கண்டருளுவார்.

## பள்ளியறை :

மேற்கண்ட மண்டபத்தின் கீழ்ப்புறம் பள்ளியறை. இதில் வைகாசி பிரம்மோத்ஸவத்தில் 8 (எட்டு) நாட்களும், மாசி மகத்தில் 9 (ஒன்பது) நாட்களும் தன் நான்கு நாச்சிமார்களுடன் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு திருக்கோலத்தில் சேவை சாதித்து வருகிறார். இக்கட்டிடம் சலவைக்கற்களாலும், நல்ல கண்ணாடிகளாலும் மின் விளக்குகளாலும் அலங்கரித்து அமைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட

உத்ஸவங்களில் வாகன உத்ஸவ மண்டபத்திலிருந்து பெருமாள் கைத்தலத்தில் பள்ளியறைக்கு எழுந்தருளி தளிகை அமுது செய்து கற்பூரஹாரத்தி ஆனதும் எம்பெருமான் ஸேவையை நன்கு அனுப விக்கவேண்டும்.

**சேனைமுதலியார் சன்னதி :**

பள்ளியறையின் கீழ்ப்புறம் ஸ்ரீ சௌரிராஜப்பெருமாள் படைகளுக்குத்தலைவரான சேனை முதலியார் சன்னதி. இவர் சூத்ர வதி தேவியின் பர்த்தா. உலகங்களை நிர்வகிப்பவர். விஷ்ணுவாலயங் களில் காணப்படும் கஜமுகன். இவருக்கு கீழ்ப்பட்டவர்கள் கஜ முகன் — சிங்கநாதன் முதலியோர் பலர்.

**மணியம் சௌரிப்பெருமாள் :**

பெருமாள் சன்னதியின் வடபக்கம் துவார பாலகரின் சன்ன திக்கு வடக்கில் ஸ்ரீ சௌரிப்பெருமாள் சிலா ரூபத்திலும் பஞ்ச உலோகத்திலும் எழுந்தருளியிருக்கிறார். இவர் முன்னிலையில் முனி யோதரன் பொங்கலுக்கு நெய்பிடிப்பதும், பொங்கல் விற்பனை செய் வதும் வழக்கம். இன்றும் தொன்றுதொட்டு நடந்து வருகிறது. ஒவ் வொரு பங்குனி மாதம் அஸ்த நட்சத்திரத்தில் மாடவீதியில் எழுந் தருளுவார்.

**வாகன மண்டபம் :**

மணியம் சௌரிப்பெருமாள் சன்னதிக்கு வடக்கில் உள்ள கிழக்கு மேற்கு கல்லறையில் விலையுயர்ந்த வாகனங்கள் இருக்கின் றன. தங்கப்பல்லக்கு, தங்கக்குதிரை, சூரியப்பிரபை, சந்திரப்பிரபை, வெள்ளி ஹனுமான் வாகனம் முதலியவைகள் இருக்கின்றன.

**ஸ்ரீ சக்ரவர்த்தி திருமகன் சன்னதி :**

மகா மண்டபத்தில் வடக்கு சுவர் பக்கமாக மேற்படி சன் னதி அமைந்துள்ளது. ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன், லக்ஷ்மணன், சீதாபிராட்டியார், காளிங்கநர்த்தன கிருஷ்ணன், சிலாரூபமாக தெற்கு திருமுகமண்டலத்துடன் சேவை சாதிக்கின்றனர்.

**கெருடன் சன்னதி :**

பெருமாள் சன்னதிக்கு எதிரில் பக்ஷிராஜன் சன்னதி இருக் கின்றது. இச்சன்னதியின் வடக்கில் முனியோதரன் பிள்ளையின் மனைவி விரகரதி போகம் என்பவருடைய சிலை இருக்கின்றது.

**கண்ணபுர நாச்சியார்:**

சௌரிராஜப் பெருமாளின் வலது பக்கம் தனிக்கோவில் நாச்சியார் சன்னதி. மூலவர் பெயர்–கிருஷ்ணபுர நாயகி; உத்ஸவர் பெயர்–கண்ணபுரநாயகி, கெர்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகா மண்டபம், பெரிய மண்டபங்கள் கருங்கல்லால் அமைந்திருக்கிறது. பிரதி வெள்ளிக்கிழமைதோரும் தாயார் புறப்பாடு உண்டு. பெருமாள் அத்யயன உத்ஸவம் முடிந்தபிறகு தாயாருக்கும் 9 நாள் உத்ஸவம் உண்டு. இதில் கடைசி உத்ஸவம் தை அமாவாசையன்று வரும். அன்று தாயார் பெருமாள் சன்னதிக்கு எழுந்தருளி பெருமாளுடன் சேர்த்திஉத்ஸவம் கண்டருளுகிறுர். நவராத்திரி உத்ஸவம் வெகு விமரிசையாக நடைபெறுகிறது. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு உபயதார்கள் உபயம் செய்து வருகிறுர்கள். பங்குனி உத்திரத்தன்று ஸ்ரீ சௌரிராஜப் பெருமாள் தாயார் சன்னதிக்கு எழுந்தருளி தாயாருடன் சேர்த்திஉத்ஸவம் நடைபெறுகிறது.

**ஆண்டாள் சன்னதி:**

பெருமாள் சன்னதிக்கு வடக்கு பிரகாரத்தில் பெரியாழ்வார் பெண்பிள்ளையான ஸ்ரீ ஆண்டாள் சன்னதி இருக்கிறது.

**இத்தலத்தில் தினசரி ஆறு காலங்கள்.**

காலை 6-00 மணி – வெங்கடேச சுப்ரபாதம் (இசைத்தட்டு – ஒலி பெருக்கிமூலம்.)

காலை 7-00 மணி – சன்னதி திருக்காப்பு நீக்குதல்:

திருக்கண்ணபுரம் ஸ்ரீ உ. ப. வே. பண்டிதரத்னம் ஸ்ரீநிவாஸாச்சாரியார் ஸ்வாமியால் இயற்றப்பட்ட ஸ்ரீ சௌரிராஜ சுப்ரபாதம், ஸ்ரீ சௌரிராஜ பிரபத்தி, மங்களஸ்லோகம் முதலியன சொல்லப்பட்டு வருகிறது.

காலை 7-30 மணி – விஸ்வரூபசேவை, கோதரிசனம் – பால் அமுது செய்வித்து கோஷ்டி வினியோகம். நித்யபுஷ்கரிணியின் வடக்குப் படித்துறை (உடையவர் சன்னதி படித்துறை)யிலிருந்து திருமஞ்சனம் தீர்த்தம் மேளத்துடன் மடவிளாகம் வழியே கோயிலுக்கு கொண்டு வருதல். உஷட்காலம் – தோசை (5) பெருமாள் – தாயார் அமுது செய்வித்து டவண்டை மரியாதையுடன் மேலவீதியிலுள்ள திருமங்கை ஆழ்வாருக்கும் அமுது செய்வித்து தேவஸ்தானத்திற்கு வந்ததும்

விற்று முதல் செய்து விடுகிறார்கள். ஒரு தோசை யின் கிரையம் 0–20 ந.பை.

கோவில் திட்டம் இக்காலத்தில் திருவநந்தல் கட்டளை. 1 படி ததியன்னம். ஏனங்குடி ஸ்ரீ விஜய ராகவலு நாயுடு அவர்களால் செய்யப்பட்டு தேசாந் திரிகளுக்கு கொடுக்கப்பட்டு வருகிறது. அமாவா சையன்று கைத்தல சேவைக்கு பெருமாள் எழுந் தருளப்பண்ணும் ஸ்ரீபாதம்தாங்கிகளுக்கு 4 தோசை யும், 1 தோசை விற்பனையும். ஆழ்வார் ஆசார்யாள் வருஷத் திருநக்ஷத்திரத்தின்போது தோசை 5-யும் ஆழ்வார் சன்னதி சாத்துமுறை கோஷ்டி வினி யோகம் செய்யப்பட்டு வருகிறது.

## இரண்டாவது காலம் – காலசந்தி.

காலை மணி 9–00. புண்யாகவாசனம்: திருவாராதனம் யக்ஞோபவீதம் சாற்றுதல் (திருப்பாவை சேவை துடக்கம்) ததி யன்னம் அரிசிபடி – 2. கோவில் திட்டம் பெருமாள், நாச்சியார், ஸ்ரீ ராமர், சுற்றுக் கோயில்கள், ஹனுமான் சன்னதி தளிகை அமுது செய்வித்த பிறகு வடக்கு மட விளாகத்தில் எழுந்தருளியிருக்கும் உடையவர், கூரத்தாழ்வார், இவர்களுக்கு அமுது செய்வித்து பிறகு ஹோமம் செய்த பிறகு ஸ்ரீபெலி ஸாதித்து திருப்பாவை சாற்றுமுறையாகி 1 படி பிரஸாதம் அத்யாபகாள், கைங்கர்யபரர் களுக்கும் 1 படி பிரஸாதம் கோஷ்டி வினியோகமும்.

காலை 10 மணிக்கு ஸ்ரீமத் வால்மீகி இராமாயணம் பிரவச னம் ஸ்ரீ சக்ரவர்த்தித்திருமகன் சன்னதி முன்பாக காலை 11 மணி: ஸ்ரீ கண்ணபுரமுடையான் திருமஞ்சனம் தினந்தோறும் நடை பெற்று வருகிறது.

## மூன்றாவது காலம் – உச்சிக்காலம்.

காலை 12–30 மணி. திருவாராதனம், தளிகை, சுத்தான்னம் பட்டைகள் (கோவில் திட்டம்) பெருமாள், நாச்சியார், ராமர் அமுது செய்தபிறகு சிப்பந்திகளுக்குச் செலவு பிரஸாதம். இக்காலத்தில் செங்கமல நாயகிபுரம் ஸ்ரீரா. ரெங்கசாமி நாயுடு அவர்களால் ஏற் படுத்தப்பட்ட 2 படி ததியன்னம் செய்து பெருமாள், தாயார் இவர்களுக்கு அமுது செய்வித்த பிறகு தேசாந்திரி வினியோகம் நடந்து வருகிறது. தினந்தோறும் பெருமாள் தாயாருக்கு 2 படி அரிசி அலங்காரத் தளிகை செய்வித்து அமுது செய்வித்த பிறகு

4 ஸ்வாமிகளுக்கு ததியாராதனை செய்து வருகிறார்கள். கோதையம்மாளால் 1 படி அரிசி அலங்கார தளிகைசெய்து பெருமாள், தாயார், உடையவருக்கு அமுது செய்வித்து பிறகு இரண்டு ஸ்வாமிகளுக்கு உடையவர் சந்நிதியில் ததியாராதனை செய்து வருகிறார்கள். மாலை 5–30 க்கு நித்யானுசந்தானம் சேவிக்கிறார்கள். திருமாலை பிரதக்ஷிணம் வந்து பெருமாளுக்கு மாலை சமர்ப்பித்தல்.

### நான்காவது காலம் – சாயரக்ஷை.

மாலை 7–00 மணி. திருவாராதனம், வேதபாராயணம், அத்யய, சம்திக. வெ. முரு. கட்டளை – புளியோதரை – 1 படியும் தேவஸ்தானம் – வடை $\frac{5}{16}$ படி – 5 வடை, சுண்டல். தளிகை அமுது செய்வித்து பிறகு கோஷ்டி வினியோகம். 2 வடை கோஷ்டி வினியோகம். 3 விற்பனை. வடை ஒன்று விலை 20 ந.பை நாச்சியார் சன்னதியில் கடலைசுண்டல், மிளகு ஒரை. கட்டளை அமுது செய்வித்த பிறகு வினியோகிக்கப்படுகிறது.

ஆண்டாள் சந்நிதியில் தினந்தோறும் ஓர் ஆசிரியரைக்கொண்டு பிரபந்த பாடசாலை நடைபெற்று வருகிறது. குழந்தைகளுக்கு சுண்டல் வினியோகிக்கப்பட்டு வருகிறது. சேஷியம்மாள் கட்டளை – 1 படி ததியன்னம் செய்து கோவில் திட்டத்தில் வினியோகிக்கப்படுகிறது.

### 5-வது காலம் – இராக்காலம் (ரெண்டாங்காலம்).

இரவு 8–00 மணி. திருவாராதனம். தளிகை, சுத்தான்னம். கோவில் திட்டம் பட்டை பிரசாதம். சிப்பந்திகளுக்கு சிலவு. பெருமாள், தாயார் ராமர், சுத்துக்கோவில், உடையவர், திருமங்கை ஆழ்வார் சன்னதி அமுது செய்வித்தல். இக்காலத்தில் 1 படி ததியன்னம் செய்து பெருமாளுக்கு அமுது செய்தபின் திருமங்கை ஆழ்வாருக்கு அமுது செய்தபிறகு தேசாந்திரிகளுக்கு வினியோகம் நடைபெற்று வருகிறது. புதுக்கோட்டையார்–கட்டளை–நடேச பிள்ளை மூலம். 1 படி ததியன்னம் செய்து பெருமாள் தாயாருக்கு அமுது செய்த பிறகு தேசாந்திரிகளுக்கு கொடுக்கப்பட்டு வருகிறது.

### 6-வது காலம். அர்த்த ஜாமம்.

9-00 மணி. முனியோதரன் பொங்கல் – கோவில் திட்டம் பெருமாள், தாயார் அமுது செய்வித்தல். வட்டில் 2-க்கு உருண்டை – 16 – இதன் விலை 40 ந.பை ரூ. 6–40. ஸ்ரீ மணியம் சௌரிராஜப் பெருமாள் சந்நதியில் ஒரை போட்டு விற்பனை நடைபெறும்.

### திருப்பள்ளியடைத்தல்.

மன்னுபுகழ் பாசுரங்கள் சேவித்துத் திருக்காப்பிடல்.

## உத்ஸவங்கள்.

### 1. பிரஹ்மோத்ஸவம் :

இது வைகாசி மாஸம் பூர்ணிமை திதியில் முடிவுறும். த்வஜா ரோஹணம் முதல் விடாயாத்திமுடிய பன்னிரண்டு தினங்கள் வாஹ நாதிகளுடன் விமரிசையாய் நடக்கும். இந்த உத்ஸவம், ஸ்தலபுரா ணத்தில், வைகாசி மாஸம் பூர்ணிமை அநுஷ நக்ஷத்திரத்தில் வஸு வின் பெண்ணுன பத்மினீ நாயிகையை பெருமாள் மணம் புரிந்து கொண்டதாகக் காண்பதால், அந்தக்கல்யாண உத்ஸவமே தற்போது ப்ரஹ்மோத்ஸவமாக நடந்து வருகிறது. ஆயினும் இதுதன்னில் எட்டாவது உத்ஸவம் ஸாயங்காலம் பத்மினீ தேவியின் கல்யாண உத்ஸவமும் தனியாக நடத்தப்பட்டு வருகிறது. நித்ய புஷ்கரிணி யில் தீர்த்தவாரி.

### 2. மகோத்ஸவம் :

இது மாசி மாதம் பூர்ணிமைதிதி பத்தாவது நாள் ஸமுத்திரத் தில் தீர்த்தவாரியுடன் நடைபெறுகின்றது. த்வஜாரோஹணம் இந்த உத்ஸவத்திலும் உண்டு. வாஹநாதிகளுடன் விமரிசையாய் நடக் கும். இந்த உத்ஸவமும் ஸ்தலபுராணம் பதினைந்தாவது அத்தியாயத் தின்படி ஸமுத்திரத்தில் க்ஷேத்திரத்தின் எல்லையாய் அமைந்திருக்கும் கருடபர்வதத்தின் வேண்டுகோளின்படி ப்ரதி வருஷமும் அதற்கு கருடாரூடராய் ஸேவையளிக்க ஏற்பட்டதாகையால் புராணஸம் பந்தம் பெற்ற உத்ஸவமேயாகும். இதுவும் பதின்மூன்று தினங் களில் முடிவுறுகிறது. கடைசிநாள் அழகிய தெப்பத்தில் பெருமாள் ஸேவை தந்தருளுவது கண் கொள்ளாக் காக்ஷியாகும்.

குறிப்பு: புராணத்தில், "க்ருதயுகத்தில் ஆதியில் சித்திரை மாதம் பூர்ணிமை ஹஸ்த நக்ஷத்திரத்தில் ஸ்ரீ சௌரிராஜன் இந்த க்ஷேத்திரத்தில் ஸ்ரீ வைகுண்டத்திலிருந்து ஆவிர்ப்பவித்தார்" எனக் காணப்படுகிறது. அதன்படி ஹஸ்த நக்ஷத்திரம் ஸ்ரீ சௌரிராஜ னுடைய திருநக்ஷத்திரமாகும். இதைக்கொண்டே மாதாமாதம் ஹஸ்த நக்ஷத்திரத்தில் ஸ்ரீ சௌரிராஜனுக்குப் புறப்பாடு நடந்து வருகிறது. எனவே சித்திரை மாஸம் ஹஸ்த நக்ஷத்திரம் சௌரி ராஜன் வருஷத் திருநக்ஷத்திரமாதலால் மற்றை க்ஷேத்திரத்தில் போல் அதைத் தீர்த்தவாரித் தினமாகக்கொண்டு, ப்ரஹ்மோத்ஸவம் ஒன்று நடந்து வந்து, பின்னர் அது நின்றிருக்குமோவெனத் தோன்றுகிறது.

### மாஸோத்ஸவங்கள் :

ப்ரதி மாஸப்பிறப்பு, ஹஸ்த நக்ஷத்திரம், இரண்டு ஏகாதசிகள். அமாவாஸ்யை, என்ற ஐந்து தினங்களும் பஞ்சபர்வங்களெனப்படும்.

இவைகளில் சாயங்காலம் பெருமாளுக்கு ப்ராகாரப் புறப்பாடு உண்டு. அமாவாஸ்யையன்று மத்தியதினத்தில் திருக்கைத் தலத்தில் விபீஷணனுக்கு ஸேவை கொடுப்பது அதிக விசேஷமாகும்.

கண்ணபுரத் தாயாருக்கு, நான்கு வெள்ளிக்கிழமைகளிலும் ப்ராகாரப் புறப்பாடு, சாயங்காலம் உண்டு. **சித்திரை** மாதம் சித்ரா பர்வம், சித்திரை வருஷப் பிறப்பு, இவைகளில் மாடவீதிப்புறப்பாடு.

**ஆடி மாதம்** 18-ந் தேதி – பதினெட்டாம் பெருக்கு – முடி கொண்டான் ஆற்றுக்கு பல்லக்கில் எழுந்தருளல். ஆடிப்பூரம் – ஸ்ரீ ஆண்டாளுடன் பெருமாள் புறப்பாடு. ஏகாதசி – ஜயேஷ்டாபி ஷேகத் திருமஞ்சனம்.

**ஆவணி-மீ :** **கண்ணபிரான் ஸ்ரீஜயந்தி.**

,, மறுதினம் காலையில் கண்ணபிரான் புறப்பாடு.

,, சாயங்காலம் ஸ்ரீ சௌரிராஜன் உரியடி உத்ஸவம்.

**புரட்டாசி-மீ :** **பவித்ரோத்ஸவம்.** இது ஏகாதசியன்று ஆரம்பித்து பூர்ணிமை திதியில் தீர்த்தவாரியுடன் முடியும். பவித்ரோத்ஸவம் ஐந்து தினங்கள் நிகழும். கடைசி தினம் காலையில் கருடவாஹனரூடராய் வீதி வலம் வந்து புஷ்கரிணியில் தீர்த்தவாரி.

,, **நவராத்திரி** – ஒன்பது தினங்கள் ஸ்ரீ கண்ணபுரத் தாயார் கொலு வீற்றிருத்தல்.

,, **விஜயதசமி** – குதிரை வாஹனத்தில் சாயங்காலம் புறப்பாடு. மகா நோன்புத் திடலில் அம்புபோடுதல்.

**கார்த்திகை-மீ :** கார்த்திகை தீபோத்ஸவம், சொக்கப்பானை, திருவீதிப் புறப்பாடு.

**மார்கழி-மீ :** அத்யயந உத்ஸவம். அமாவாஸ்யைகழிந்து மறுதினம் ஆரம்பித்து பத்துதினங்கள் "பகல் பத்து" எனப் படும். மண்டபத்தில் புறப்பாடு. ஸ்ரீ வைகுண்ட ஏகாதசி தொடங்கி பத்து தினங்கள் இராப்பத்து உத்ஸவம் எனப்படும். ப்ராகாரத்தில் புறப்பாடு. இதில் முதல்நாள் ஸ்ரீ வைகுண்டைஏகாதசிப் புறப்பாடும், கடைசி நாள் பெரிய சாற்றுமுறை புறப்பாடும் ஸேவித்து மிகவும் மகிழவேண்டியவையாகும்.

மார்கழி-மீ : தாயார் அத்யயந. உத்ஸவம். இது பெருமாள் உத்ஸவம் முடிந்து பின் ஒன்பது தினங்கள் நடைபெறும். இதில், ஏகாதசி தொடங்கி, கண்ணபுரத்தாயார் ப்ராகாரப் புறப்பாடு. கடைசி நாளாகிய அமாவாஸ்யையன்று பெருமாள் நாச்சியார் திருக்கோலத்துடனும், நாச்சியார் பெருமாள் திருக்கோலத்தோடும் ப்ராகாரம் புறப்பாடு. இவ்வுத்ஸவம் விசேஷமாகவிருக்கும். மறுதினம் பெருமாள் சந்நிதியில் இருவருமான சேர்த்தி உத்ஸவம். இதுவும் மிகச்சிறந்த உத்ஸவம்.

தை-மீ : ஸங்கராந்தி ஆஸ்தானம் (புராணப்படி) மறுநாள் – நாச்சியார் கனு உத்ஸவம், பகலில். இரவு – கனுப் பாரி வேட்டை. ஸ்ரீ சௌரிராஜன் பல்லக்கில் வீதிப் புறப்பாடு.

3-வ மட்டையடி உத்ஸவம். வீதியில் பல்லக்கில் புறப்பாடு.

பங்குனி-மீ : பங்குனி உத்திரம் – தாயார் ஸந்நிதிக்கு பெருமாள் எழுந்தருளி இருவருமான சேர்த்தி உத்ஸவம். இதுவும் சிறந்ததே.

ரோஹிணி உத்ஸவம்: கோபாலன் குதிரை வாஹநத்தில் வீதிப் புறப்பாடு.

,, அமாவாஸ்யைக்கு மறுநாள் யுகாதிப்பண்டிகை (தெலுங்கு வருஷப்பிறப்பு) வீதிப்புறப்பாடு.

,, ஸ்ரீ ராமநவமி: ஸ்ரீ ராமன், ஸீதாதேவி, லக்ஷ்மணனுடன் வீதிப் புறப்பாடு.

ஸ்ரீ:



உ

" ஓம் நமோ நாராயணுய "

ஸ்ரீ விஷ்வக்ஸேநாய நம:

உத்பலாவதகே ரம்யே விமாநே புஷ்கரேக்ஷணம் ।
ஸௌரிராஜமஹம் வந்தே ஸதாஸர்வாங்க ஸுந்தரம் ॥.

ஒப்பற்ற மாண்பமைந்த உத்பல ஆவதக
சிற்பவிமானத்திற் செங்கமலப் — பொற்பமையும்
கண்ணுடையன் அங்கமெலாங் காட்டும் கவினுடையன்
கண்ணபுரமால் எமக்குக் காப்பு.

திருக்குருகூர் நம்மாழ்வார் திருமங்கையாழ்வார் உள்ளம்
உருக்குரு விண்டு சித்தர் உயர்வில்லிப் புத்தூர்க் கோதை
திருக்கறு சேரமன்னர் ஸ்ரீ குலசேகராழ்வார்
திருப்பெற வாழ்த்தியுள்ளார் திருக்கண்ண புரத்தைத்தாமே :

காவிரிபாயும் சோழவளநாட்டில் ஆழ்வார்களால் மங்களா சாசனம் செய்யப்பட்ட திவ்ய தேசங்களில் ஸ்ரீ ஸௌரிராஜப் பெருமாள் எழுந்தருளியிருக்கும் திருக்கண்ணபுரம் தனிச் சிறப்புடையதாகும். பதினெண் புராணங்களிலே ஒன்ருன பாத்மபுராணத்தில், ஐந்தாம் கண்டத்தில் எளிதில் மந்திரஸித்திதரும் புண்ணியத் தலங்களில் இத்திருக் கண்ணபுரம் முக்யமானதென்று ஸ்ரீவ்யாசாசாரியார் 96-ம் அத்யாயம் முதற்கொண்டு 111-ம் அத்யாயம் ஈருக 16 அத்யாயங்களிலே இதன் பெருமையை அழகாக விரித்துரைத்திருக்கின்ருர். எழுகோடி மஹாமந்திரங்களிலே மிகச் சிறந்ததான அஷ்டாக்ஷர மஹாமந்திரத்தை இங்கு ஜபம் செய்தால் சீக்கிரத்திலே பெரும்பயன் பெறலாம் என்றும், ரிஷிசந்தம், தேவதை நியாஸம், இது போன்ற அங்ககலாபங்களில்லாமல் அஷ்டாக்ஷர மந்திரத்தை ஜபித்தால் கூட இங்குஸாதகர்களுக்கு முக்தியே கிடைக்கும் என்று புராணம் கூறும். புண்ணியமான தலம், வனம், நதி, கடல், நகரம், புஷ்கரிணீ, விமானம் இவ்வேழும் ஒருங்கே அமைந்த பெருமையும் திருக்கண்ணபுரத்தையே சாரும். ஆழ்வார்களால் மங்களா சாஸனம் செய்யப்பட்ட பெருமைகொண்ட 108 திவ்ய தேசங்களிலே, நடையழகைக் கண்டுகளிக்க விரும்பிய தர்மாத்மாவான விபீஷணுழ்வாருக்கு, திருவரங்கத்திலே அரவணையிற் பள்ளிகொண்ட பெருமாள் தன் நடையழகை இத்தலத்திலேதான் காண்பித்தார் என்பர்

பெரியோர். தண்டகாரண்யத்தின் மத்தியிலுள்ள இக்கண்ணபுரத்தில் ஸ்ரீபதியும் ஸர்வ மங்களப்ரதனுமான ஸர்வேசுவரன், கிருத யுகத்தின் ஆதியிலே பௌர்ணமியும் ஹஸ்த நக்ஷத்திரமும் திங்கட் கிழமையும் கூடியதொரு சுபதினத்தில் சாயங்காலத்தில் நித்ய புஷ்கரிணீ தீரத்தில் வைகுந்தத்தினின்றும் உலகம் உய்ய எழுந்தருளினன் என்று புராணம் புகழ்ந்து பேசும். ஆகவே "ஜனங்களே! பிரளய ஜலத்தில் ஆலிலையின்மேல் கண்வளர்ந்த ஜகந்நாதன் கடலலைகள் மோதுகின்ற மதில்களால் சூழப்பட்ட திருக்கண்ணபுரத்தில் இப்போது எழுந்தருளியிருக்கிறார். அவருடைய திருவடிகளில் தாமரை முதலான கிடைத்த புஷ்பங்களை காலையிலும் மாலையிலும் கிடைத்த போதெல்லாம் அர்ப்பணம் செய்யுங்கள். உங்கள் துக்கமெல்லாம் போம்" என்றும் (திருமொழி 10–1 வது பாட்டு) "வேதத்தை எப்போதும் படித்துக்கொண்டும் பிறருக்கு உபதேசம் செய்துகொண்டிருக்கிற பெரியோர் விரும்பும் திருக்கண்ணபுரத்தில் எழுந்தருளியிருக்கும் உலகத்துக்குக் காரணமாய் இருப்பவரை அடைந்தவர்களுக்கு வியாதி தணியும். அல்லல் இல்லையே".

பாதநா ளும்பணி யத்தணி யும்பிணி
ஏதஞ்சா ராவெனக் கேலினி யென்குறை
வேதநா வர்விரும் புந்திருக் கண்ணபுரத்து
ஆதியானை யடைந்தார்க் கல்ல லில்லையே;

(திருமொழி 10–11)

என்று நம்மாழ்வார் பாடிப் புகழ்ந்தார். இம்மாபெருந்தலத்தின் சிறப்பினை இங்கே காண்போம்.

---

## திருக்கண்ணபுரமும் அதன் எல்லையும்

ஆறு யோசனை பரப்புள்ள பகுதி "கிருஷ்ண க்ஷேத்திர"மெனவும், இதனிடையில் இரண்டு யோசனை பரப்புள்ள பூமி "கிருஷ்ணாரண்யம்" எனவும், இதன் மத்தியில் கால்யோசனை பரப்புள்ள புண்ய பூமியே "திருக்கண்ணபுரம்" என்றும் பெயர் பெற்று விளங்குகின்றது.

பெரிய திருவடியின் உருவம் போன்ற உருவம் கொண்டதும் சமுத்திரத்தின் இடையில் மிளிர்வதும் இரண்டு யோசனை தூரத்திலே உள்ளதுமான "கருடபர்வதமே" அலைமோதும் மதிள் சூழ்ந்த இந்த கிருஷ்ண க்ஷேத்திரத்தின் கிழக்கு எல்லையாகும். "காக்கைக் கழனி" என்று கூறப்படுகிற "காகதீர்த்தவதீ" என்ற புனித நதியே தென்திசையெல்லை யாகவும், "பங்கஸ்தானம்" என்று புராணத்தில் பேசப்படுகின்ற "திருச்சேறை" என்ற திவ்வியத்

திருப்பதியே மேற்கு எல்லையாகவும், விந்தியத்திற்குத் தெற்கே இது போன்ற புண்ணிய நதியில்லை என்று புகழப்படும் காவிரியே வட திசை எல்லையாகவும் கொண்டு திகழ்கிறது இத்தலம். இந்த நான்கு எல்லைக்கும் உட்பட்ட பிரதேசம்தான் "கிருஷ்ண க்ஷேத்திரம்" என்று கூறப்படுகிறது. திருவெண்காடு முதலிய க்ஷேத்திரங்களும் இதன் சார்பில் பேறுபெற்று விளங்குகின்றன.

இதனிடையில் பல புஷ்கரிணிகளும் பல முனிவர்களது ஆசிரமங்களும், சிறந்து விளங்குகின்றன. மூவுலகிலும், புண்ணியத்தை சேகரிக்க விரும்புவாருக்கு ஜம்பூத் வீபத்தில் பாரத வர்ஷத்தில் தெற்கு திக்கில் கிருஷ்ண க்ஷேத்திரத்தில் கிருஷ்ணாரண்யத்தில் இத் திருக்கண்ணபுரமே ஏற்றயிடமாகும். இத்தலத்தின்கண் மிக அற்புதமாக அமைந்திருக்கும் "உத்பலாவதகவிமானத்தில்தான் ஸ்ரீ சௌரிராஜப்பெருமாள் நித்யவாசம் செய்து உலகம் உய்ய அநுக்கிரஹம் செய்து கொண்டிருக்கிறார். பாபத்தைப் போக்கிப் புண்ணியத்தை நல்கும் இந்த க்ஷேத்திரத்தை நினைப்போர், பேரைச்சொல்வோர், செல்ல விரும்புவோர், செல்வோர், சென்று சேவிப்போர், அங்கு நித்ய வாசம் செய்வோர் இவர்களின் புண்ணியப்பெருக்கை இவ்வளவென்று கணக்கிட்டுச் சொல்ல வியலாது.

## கருட பர்வதமும் பெரிய திருவடியும்

கல்மஷங்களைக் களைந்தெறியும் இக்கிருஷ்ணாரணியம் தபஸ்விகள் தங்குமிடமாகவும், பகவான் ஸ்ரீமன் நாராயணனுடைய பூத கணங்கள் நடமாடுமிடமாயும், அவர் பிரஸாதம் பெற்றவர்களன்றி மற்றையோர் பிரவேசிக்க முடியாததாயுமிருப்பதால் இதை "தேவோத்யானம்" என்றே தபோதனர் அழைப்பர். இத்தல வைபவத்தாலே கருடபர்வதமும் பெரிய திருவடியும் பெரும்பேறு பெற்றார்கள்.

முன்னொருகாலத்தில் பர்வதங்களின் இறகுகளை வெட்டி வீழ்த்தும் இந்திரனைக் கண்டு பயந்து இறக்கை பறிபோகாமலிருக்க கண்ணபுரத்தின் கிழக்கே கடலில் வந்து மூழ்கிவிட்டது ஹிமவானின் புதல்வனாகிய கருட பர்வதம். கிருஷ்ண க்ஷேத்திரத்தின் பிரபாவத்தினாலும் சௌரிராஜப் பெருமாளுடைய திவ்ய சக்தியினாலும் அம்மலையை ஒன்றும் செய்ய இயலாமல் இந்திரன் கையில் வஜ்ரத்துடன் அம்மலை வெளிவரும் சமயத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தான். இந்த சமயத்தில் பெரிய திருவடி கத்ருவினிடம் தான் செய்த ப்ரதிஞ்ஞையை நிறைவேற்றவும், தன்னையும் தன் தாயையும் அடிமைத் தளையினின்று விடுவிக்கவும் – தேவலோகம் சென்று

இந்திராதியர்களை ஜயித்து அமிர்தம் கொண்டுவந்தார். ஆயினும் தேவர்களின் வேண்டுகோளுக்கிணங்க அமிர்தத்தை கத்ரூவிற்கும் அவன் குமாரர்களான நாகங்களுக்கும் கிடைக்காமல் வஞ்சித்து மீண்டும் இருந்த இடத்திலேயே வைத்துவந்தார் பெரியதிருவடி. அன்று முதல் "வலிமையிலே உலகத்தில் எனக்கு மிக்கார் இல்லை" என்று கர்வம் கொண்டவராய் யாரையும் மதியாது உலகைச் சுற்றி வரும்போது கிருஷ்ணாரணியத்தில் க்ஷேத்திர பாலர்களையும் மதியாது செல்ல, விஷ்ணுசேனாவீரர்கள் அவர் நிழலைப்பற்றி இழுத்து அவர் வலிகுன்றச் செய்தனர். இதனால் சக்தியிழந்த பெரிய திருவடி கடலில் மூழ்கிய கருடபர்வதத்தின் மீது விழுந்தார். பெரிய திருவடியைக் கண்டதும், நடந்த விஷயமறியாத இந்திரன், பயந்து இந்திரன் ஸ்வர்கம் சென்று விட்டான். வலிகுன்றிய பெரிய திருவடியோ, "என் பராக்கிரமத்தை மங்கச் செய்தவன் என்னிலும் வலிமை மிக்கவன்". அவர் இந்த க்ஷேத்திரத்தின் தெய்வமான சௌரிராஜப் பெருமாளே. ஆகவே அவரைக் குறித்து தவம் செய்ய வேண்டும் என விரும்பி பல வருஷங்கள் தவமியற்றினான். தவத்தினால் மகிழ்ச்சியுற்ற பெருமாள் பெரிய திருவடிக்கு தரிசனமளித்து "பக்ஷிராஜனே! நான் பிரளயகாலத்தில் கூட இந்த கிருஷ்ண க்ஷேத்திரத்தைப் பரிபாலித்துக்கொண்டு உத்பலாவதகவிமானத்தில் வீற்றிருக்கிறேன். இங்குள்ள க்ஷேத்திரபாலர்களாகிய என் ஸேனையிலுள்ளோர் அவமதிப்பவர்களைக் கொன்று குவிப்பர். நல்ல வேளையாக உன் சக்தியை இழுத்து உன்னை இங்கே வீழ்த்தினர். இன்று முதல் இந்தத் தலத்தையும் இத்தலத்தில் உள்ளவர்களையும் அவமதித்துச் செல்லாதே. என் தரிசனம் வீணாவதில்லை. வரங்கேள்" என்று அருளினார். பெரிய திருவடியும் "நான் முன்பு அமிர்தம் கொண்டு செல்லுங்கால் தங்களுக்குக் கொடியாயிருக்கும் பேறுபெற்றேன். இப்பொழுது நான் தங்களுக்கு வாஹனமாயிருக்கும்படியும், தங்களைத் தாங்கச் சத்தியுள்ளவனாய் இருக்கும் படியும் தங்கள் பக்கத்திலேயே நான் நித்தமும் தங்கும் பாக்யமும் தந்தருள வேண்டுகிறேன். அதோடு தங்கள் பக்தனாகிய எனக்கு இடமளித்த இந்த பர்வதம் – இனி இந்திரனிடம் பயப்படாது வெளிவரவும் அருள் புரிய வேண்டும்" என்று பிரார்த்தித்தான். பெருமாளும் இம்மலை இக்கடலில் இருந்துகொண்டு இந்த க்ஷேத்திரத்தின் எல்லையாய் இருந்துகொண்டு யுகத்தின் இறுதியிலே உன்போன்ற வடிவங் கொண்டதாய் என்னை தரிசனம் செய்து கொண்டிருக்கட்டும். இனி இந்திரனிடமிருந்து இதற்கு பயம் நேராது. இத்துடன் இந்த ஸமுத்திரம் இந்திரனின் ப்ரம்மஹத்தியால் மாசுபெற்றிருக்கிறது. அது பரிசுத்தம் பெற்று இம்மலையின் பின்தள்ளியிருக்கட்டும்", என்று வரங்கொடுத்து மறைந்தார். அன்று முதல் பெரிய திருவடி ஸ்ரீ சௌரிராஜப் பெருமாளுக்கு வாஹனமாகவும், மலை கிழக்கு எல்லையாகவும் இருந்துகொண்டு வருகிறது.

## இந்திரனுக்குப் பிரம்மஹத்தி தோஷம் நீங்கிய வரலாறு.

முன்னொரு சமயம் இந்திரன் த்வஷ்டாவின் புதல்வனான விசுவ ரூபனை தெய்வத் தச்சனின் உதவிகொண்டு கொன்றுவிட்டான். இதனால் கோபமடைந்த த்வஷ்டா விருத்திரன் என்ற அசுரனை உண்டாக்கினான். அவன் வளர்வது கண்டு இந்திரன் பெருமாளைச் சரணடைந்தான். அவன் "விருத்திரனோடு சிநேகம் கொள்ளுங்கள். பின் பார்த்துக்கொள்ளலாம்" எனக்கூற, அப்படியே சிநேகம் கொண்டனர். அதன் காரணமாக "உலர்ந்தவைகளினாலும், நனைந்தவைகளினாலும், இரவிலும் பகலிலும், தரையிலும் வானிலும், கயிற்றாலும் விஷம்தோய்ந்த ஆயுதங்களினாலும் எனக்கு மரணம் எற்படக் கூடாது" என்று தேவதைகளிடம் வரம்பெற்றான். இப்படிப் பல்லாண்டுகள் செல்ல, ஒரு நாள் அந்திவேளையில் கடற்கரையில் தனித்திருக்கும் விருத்திரனைக் கண்டு, இவனைக் கொல்லத் தருணம் இதுவென நினைத்து அங்குள்ள நுரைக்கட்டியைக் கண்டு, இப்பொழுது, பகலுமின்றி இரவுமின்றி அந்திவேளையாய் இருப்பதாலும், தரையிலும் நீரிலுமின்றி புல்மேல் அமர்ந்திருப்பதாலும், இக்கடல் நுரையும் உலர்ந்ததாகவும் நனைந்ததாகவும் பாசமாகவும், ஆயுதமாகவும் இல்லாதிருப்பதால் இதைக்கொண்டே கொல்வோம் என்று அதில் விஷ்ணு மந்திரத்தை ஜபித்து விருத்திரனைக் கொன்றான். அது முதல் இந்திரனை பிரம்மஹத்தி பீடிக்க ஓடிவந்து கருட பர்வதத்தில் தங்கி பெருமாளைக்குறித்துத் தவம் செய்துகொண்டிருந்தான்.

இந்த சந்தர்ப்பத்தில் தேவர்கள் தங்களுக்கு அரசனின்றித் தவிக்க, அவர்களிடையே தோன்றிய நாரதர் கூறினார். "மனுஷ்ய லோகத்தில் நற்குணமுள்ள நஹுஷன் என்றொரு அரசனிருக்கின்றான். அவன் ராஜ்ய பரிபாலனம் செய்துகொண்டிருக்கும்போது சியவனர் என்ற மகரிஷி பிரயாகையில் கங்கை ஜலத்தில் மூழ்கித் தவமியற்றிக்கொண்டிருந்தார். வலைவீசும் பரதவர் மீன் பிடிக்கையில் அவரையும் தெரியாது வலையின் வாயிலாக வெளியே இழுத்தனர். அவரைக்கண்டு பயந்த பரதவர் வணங்கிப் பொருத்தருள வேண்டுமென "என்னையும் மீனோடு விற்று இந்த அரசனிடம் பொருள் பெற்றுக்கொள்ளுங்கள் என்றார்". அரசனும் வந்து நிறைய பவுன், ரத்தினங்கள், வஸ்திரங்கள் இவைகளைக் கொடுத்தும், இவை எனக்கு விலையாக முடியாது என ரிஷி கூற — பொக்கிஷத்தையும் பாதி ராஜ்யத்தையும் பின் பரிபூரணமான ராஜ்யத்தையும் கொடுத்தும் போதாது என ரிஷி மறுத்துவிட்டார். தன் பிராணனையும் சேர்த்துக் கொடுக்கிறேன் என அரசன் மீண்டும் கூற, அதுவும் ஈடாகாது என முனி கூற மிகவும் மனம் நொந்து நின்றான் மன்னன். இந்த சமயத்தில் "கவிஜாதர்" என்ற மகரிஷி வந்து அரசனிடம் சொன்னார். ஸர்வகுணங்கள் நிறைந்த பசு ஒன்றே பிராம்மணனுக்குச் சமம்.

ஆதலால் அதைக் கொடுங்கள் என்று கூற". நஹுஷனும் அவ்வாறு செய்ய சியவனரும் வலையிலிருந்து வெளிவந்தார். பரதவர் அப்பசுவை அவருக்கே கொடுக்க அதன் பயனாக அவர்கள் பாபம் நீங்கி திவ்ய விமானங்களில் அமர்ந்து தேவர்களாய் சொர்க்கம் சென்றனர். சியவனர் நஹுஷன்மீது அன்புகொண்டு "நீ சீக்கிரத்தில் தேவேந்திரனாகப் போகப் போகிறாய்" என்று வரங்கொடுத்தார். ஆதலால் நஹுஷனை தேவேந்திரனாக்குங்கள் என, தேவர்களும் அவனை அரசனாக ஏற்று சுகித்திருந்தனர்.

இந்திரனும் ப்ரம்மஹத்திதோஷம் நீங்க கருட பர்வதத்தில் பல்லாண்டுகள் தவம் செய்ய சரணாகத வத்ஸலனான சௌரிராஜப் பெருமாளும் வசிஷ்டர் முதலிய ரிஷிகளைக்கூப்பிட்டு நீங்கள் இந்திரனுக்கு அசுவமேதத்தை ஸர்வபாபஹரமான இந்த நித்யபுஷ்கரிணீதீரத்தில் செய்துவையுங்கள். விஷ்வக்ஸேனரின் வீரர்கள் குதிரையைக் காத்து நிற்பர் என்று கூறினர். அதன்படியே அசுவமேதம் ஆரம்பமாயிற்று. குதிரை நாடுகள் பல சுற்றி வந்தது. இதனிடையில் "விரித்தகேசமும், நெருப்புக்கண்ணும், பெருவயிறும், பருத்த நீண்ட தலையும், கிழிந்த ஆடையும் கொண்டவளான இரும்பு உலக்கை கையில் ஏந்தி நிற்கும் ஒரு பெண்ணைக்கொண்டுவந்து குமுதாதியர் விஷ்வக்ஸேனரிடம் கொண்டுவந்து நிறுத்தினர்." விஷ்வக்ஸேனர் விசாரிக்க அப்பெண், "நான் பிரம்மஹத்தி; இந்திரனைப் பிடித்திருந்தேன். அவன் இந்த கிருஷ்ணக்ஷேத்திரத்தில் பிரவேசித்ததால் நான் சக்தியிழந்து அவனைத் தொடராமல் வெளியில் தங்கிவிட்டேன். இந்திரன் அசுவமேதம் செய்துவிட்டால் என் கதி என்னவது? என்று எண்ணி அசுவமேதக் குதிரையைப் பிடித்தேன்" என்று விண்ணப்பித்தாள். விஷ்வக்ஸேனர் இதை பெருமாளிடம் கூற, பெருமாள் உத்திரவின்படி அவன் அவளுக்கு பூமி, மலை, மரம், பெண், கடல், நதி, இவைகளை இருப்பிடமாக வகுத்துத்தர அவள் அவைகளில் இடம் பெற்று மறைந்தாள். ரிஷிசிரேஷ்டர்கள் இந்திரனை அழைத்துவந்து அசுவமேதம் செய்துவைத்தனர். ரஹஸியமாய் இந்திராணியையும் அழைத்து வந்திருந்தனர். ஸ்ரீ சௌரிராஜப் பெருமாளே யாகத்திற்கு ஸதஸ்யராய் இருந்து நடத்திவைத்தார். இந்திராணியை ரஹஸ்யமாய் ஸ்வர்க்கம் அனுப்பிவிட்டு, இந்திரனிடம் "நீ ஸ்வர்க்கம் செல். நஹுஷனைக் காணும்போது என்னை நினைத்துக்கொள். அவனே உன்னை இந்திரனாக்கிவிடுவான்" என்று பெருமாள் கூறியனுப்பினர்.

இந்திரனும் ஸ்வர்க்கம் சென்று நஹுஷனைக் கண்டு கலங்கி விஷ்ணுவை மறந்தான். அவனால் விரட்டப்பட்டு ஹிமாலயம் சென்று ஒரு தாமரைத்தண்டில் மறைந்து இருந்து வரலானான். இந்த நேரம் இந்திராணியை தன் மனைவியாக்கிக்கொள்ள நஹுஷன்

விரும்ப, பயந்த இந்திராணி கிருஷ்ணக்ஷேத்திரம் வந்து பெருமாளைப் பிரார்த்தித்துக்கொண்டு உத்தராயண புண்யகாலத்தில் நித்யபுஷ்கரிணியில் மூழ்க, அதன் மஹிமையாலும் பெருமாள் திருவருளாலும் உபசுருதி உருவம் பெற்று இவளெதிரில் வந்து "கவலையுறுதே." நான் உன் பர்த்தாவைக்காட்டுகிறேன் என, இந்திராணி பெருமாளை வணங்கி "என் பர்த்தா தங்களை மறந்த குற்றத்தை பொருத்தருள வேண்டும்" எனக்கேட்டுக்கொள்ள, பெருமாளும் "நீ உபசுருதியுடன் சென்று இந்திரனை அழைத்துவா. நான் என் மோஹினி சக்தியால் நஹுஷனை மதங்கொண்டவனுகச் செய்து அவனை வீழ்த்திவிடுகிறேன்" என்று சொல்லியனுப்பினுர். அவளும் இந்திரனைக் கண்டு யாவையும் கூறி அவனுடன் மீண்டும் கிருஷ்ணக்ஷேத்திரம் வந்து நித்யபுஷ்கரிணியில் ஸ்நானம் செய்து அங்கே வீற்றிருக்கும் அகஸ்திய மஹரிஷியைக் கண்டாள். அவர் கூறினுர். "இந்திராணி! நஹுஷன் விஷ்ணு சக்தியால் மோஹித்து அவரால் ஏவப்பட்ட மாயையை இந்திராணி எனக்கருதி, அவளை வரிக்க, அவள் ரிஷிகள் தாங்கும் சிவிகையிலே நீ வரவேண்டுமென நாரதர், பர்வதர், அஸிதர், தேவலர், கௌதமர் முதலியோருடன் நானும் யோசித்து அவனைப் பல்லக்கில் தூக்கிச் சென்றோம். அவன் செல்லும்போது என்னைக் காலால் தூண்ட நான் அவனை மலைப்பாம்பாக நீ போக வேண்டும் என்று சாபமிட்டேன். அவன் கீழேவிழும்போது என்னை வேண்டினுன். நானும் கருணை கூர்ந்து மீண்டும் பல்லாண்டு சென்று இந்திரனுவாய் என்று கூறி வந்தேன்" என்று கூறினுர். இப்படி அகஸ்தியருடன் இந்திராதியர் பேசிக்கொண்டிருக்க அங்கு எல்லா தேவர்களும் வந்தனர். துந்துபி முழக்கினர்.

உடன் தேவர்களும் முனிவர்களும் தொடர இந்திரன் திருக்கோயிலின் உள்சென்று உத்பலாவதக விமானத்தை அடைந்து

உத்பலா வதகே ரம்யே
விமானே புஷ்கரேக்ஷணம்.
சௌரிராஜ மஹம் வந்தே
ஸதா ஸர்வாங்க சுந்தரம் || என்று

வாழ்த்தி வணங்கினுன். அங்கே அவ்விமானத்தின் நடுவிலே ஏழில் பொழியும் மைவண்ணச்சுருண்டுருளும், நறுங்குஞ்சி, அன்றலர்ந்த செந்தாமரை போன்ற திவ்யத் திருமுக மண்டலம், மகரகுண்டலங்கள் மின்னும் திருச்செவிகள், எடுப்பான ஏர்மிக்க எழிற்கொடி போன்ற மூக்கு, செம்பவளத் திருவாயின் முத்துப் பற்களிடையே மின்னித்தோன்றும் இன்முறுவல், சங்குக்கழுத்து, முன்னி அனை வருக்கும் அஞ்சேல் என அபயமளிக்கின்ற துஷ்டநிக்ரஹம் செய்யத் துடிதுடிக்கும் நீண்ட பெருந்திருக்கைகள், அதிலே அமர்ந்தி

ருக்கும் தனியாழியும் வெண்சங்கமும், பொன்னுடை பொலியும் உலகமொடுங்கும் இடை, அனைத்துலகினுக்கும் அடைக்கலமான இணையடிகள், இவ்வையாவற்றையும் ஏற்றுநிற்கும் எழிலுக்கிருப்பான நீலக்கடல் வண்ணனின் மனதுக்கும் வாக்குக்கும் எட்டாத திவ்யத் திருவடிவங்கண்டு மனமார நினைத்து வாயார வாழ்த்தி ரோமஞ் சிலிர்க்கக் கைகூப்பி நின்று

"பூயோ பூயோ நமஸ்துப்யம்
க்ஷீரஸாகரசாயினே ।
நமஸ்தே ஜகதாம் நாத
துப்யம் காரண வாமன ॥

எனப் பல்வேறு துதிகளாலே "ஆலமர்வித்தின் அருங்குறளை" ஏத்திநின்றனர். இங்கு சூடிக்கொடுத்த சுடர்க்கொடியின் "கண்ணபுரநகர் வாட்டமின்றி மகிழ்ந்துறை வாமனன்" பாசுரம் புராணசுலோகத்துடன் ஒத்திருப்பதைக் காணலாம். துதிகேட்டு அருள் புரிந்த ஸ்ரீ சௌரிராஜப் பெருமாளிடம் "இக்கதையை ஸ்மரிப்பவர், குறைவற்ற செல்வம் பெறவும், இந்திரன் செய்த துதியைப் படிப்பவர் பேரரசு பெறவும், உடல் நலம் செல்வம் புத்திரப்பேறு, நீண்ட ஆயுள் இவைகள் பெறவும் வேண்டும்" என்று வரமும் பெற்றுக்கொண்டனர். ஆகவே இக்கதை படிப்பவர் முன்கண்ட பேறெல்லாம் பெற்று பெருமாளின் திருவருளுக்குப் பாத்திரராவர் என்று பேசுகிறது பத்மபுராணம். பின் இந்திரன் ஸ்வர்க்கம் சென்று நிம்மதியாய் வாழ்ந்திருந்தான்.

## விகடாக்ஷனை ஆழியால் வீட்டிய பக்தாதங்கஹரர் அல்லது பயாரி.

வலிமை மிக்க விகடாக்ஷன் என்ற அசுரன் அசுரகணம் புடைசூழ கிருஷ்ணாரணியத்தில் பிரவேசித்து அங்கு புலி, சிங்கம், யானை முதலிய பயங்கர மிருகங்களின் உருவந்தாங்கி அங்குள்ள முனிவர் குழாத்துக்கு ஊறு விளைவித்து வந்தான். இதுபொறுக்காமல் முனிவர் பலர் ஸ்ரீ சௌரிராஜப் பெருமானைச் சரணடைந்தனர். பக்தரக்ஷணம் செய்யத் திருவுள்ளம் கொண்ட பெருமாள் துஷ்ட நிக்ரஹம் செய்வதற்காக அம்புகள் நிறைந்த அம்பராத்தூணியை தோள்மீது சுமந்து கையிற்பிடித்த பெருவில்லுடன் வேட்டுவக் கோலந்தாங்கிப் புறப்பட்டார். வேட்டை நாய்களின் வேடந்தாங்கி பெருமாளின் பூதகணங்களும் அம்பினுருவம் பெற்று அஷ்டசக்திகளும் அசுவத்தின் வடிவெடுத்துப் பெரிய திருவடியும் பின் தொடர்ந்தனர். மஹாமாயை வலையாகவும் தேவர்கள் வேடுவராக

வும் பெருமாளுக்கு உதவிநின்றனர். சுருதி ஸ்மிருதி இதிஹாஸ புராணங்கள் துதிபாடகர்களாய் பெருமாளை வாழ்த்திச் சென்றனர். இதைக்கண்ட அசுரர்கள் சண்டையிடத் தயாராயினர். தேவரும் அசுரரும் தனித்தனியே அணிவகுத்து நின்று சண்டையிட்டனர். இந்திரன் சதபர்வாவோடும் யமன் உக்ரதனுஸூடனும் விஷ்வக் சேனகுமுதாதியருடன் பிரலம்ப பரிவ்யாதர் முதலானோரும் சண் டையிட்டனர். மிகவும் கோரமான த்வந்துவ யுத்தம் நடந்தது. தன் சேனை பலங்குன்றி நிற்பதறிந்த விகடாக்ஷன் விஷ்வக்ஸேனனோடு சண்டையிட்டான். இந்த சமயம் குதிரையில் கையில் ஏந்திய கத்தி யுடன் பெருமாள் பெரும்போர் தொடங்கினர். அவர் எவர் சண் டையிட விரும்பினரோ அந்த அந்த அசுரர் முன்தோன்றி அவர் களைக் கொன்று குவித்தார். காலும் கையும் தலையும் உடலும் வெட்டப்பட்டு அசுரசேனை அழியத் தொடங்கிற்று. ரத்த நதி பெருக்கெடுத் தோடியது. விகடாக்ஷன் தானே பெருமாள் முன் வந்து சண்டையிட்டான். பெருமாளின் குதிரைமீது பாணவர்ஷம் செய்தான். ஸ்வாமியும் சார்ங்கம் வளைத்துச் சரமழை பொழிந் தார். விகடாக்ஷன் போட்ட அத்திரங்களை பெருமாள் எதிர் அத்தி ரங்கள் போட்டுத் தொலைக்க, விகடாக்ஷன் தடுக்க முடியாத பிரும் மாஸ்திரத்தைப் போட்டான். பெருமாள் அதற்கு எதிர் அத்திரம் காணாது வில்லை விட்டுவிட்டு, புனிதமானதும் ஜ்வாலைகள் நிறைந்த தும், பேரொளி படைத்ததும், தன் ஸேனைகாத்து பிறர்சேனை அழிக் குந்திறம் கொண்டதும், தவிர்க்கமுடியாததும், நிகரற்றதும் தன் மனம் நினைத்ததை அப்படியே செய்யும் சக்திபெற்றதுமான தனி யாழியை வீசினர். அது அவனைக் கொன்றது. உலகம் சாந்தி பெற்றது. தேவகந்தர்வர்கள் நாட்டியமாடினர். பிரும்மாதிகள் துதித்தனர். விஷ்வக்சேனர் முதலியோர் புகழ்ந்தனர். முனிவரர் வணங்கி "தாங்கள் பக்தா தங்கஹரர் (பக்தர்களின் மனக்கிலே சத்தைப் போக்குபவர்) என்ற பெயருடன் விளங்க வேண்டுமென வேண்டினர். சரி என்று அருளினர் சௌரிராஜப் பெருமாள். தேவர்களும் முனிவர்களும் மகிழ்ந்து இருப்பிடம் சென்றனர். கிருஷ்ணாரணியத்தின் கண் உத்பலாவதகம் அமர்ந்து பிராட்டியால் போற்றப்பட்ட பெருமாள் "பயாரி" (பயத்தை அழிப்பவர்) என் றழைக்கப்பட்டு, பிரயோகம் செய்யப்படுகின்ற மாபெரும் சக்கிரத் தைத் தாங்கும் திருக்கையோடு இன்றும் உலகம் உய்யத் தோற்ற மளிக்கிறார்.

## "நித்யபுஷ்கரிணீ"

பாண்டி நன்னாட்டில் மணலூருபுரத்தில் வள்ளலும் சமர்த் தனும் சுத்தனும் வீரனும் நீதிமானும் தர்மத்தில் நாட்டம் கொண்ட வனுமான சித்தசிரவஸ் என்ற ஒரு மன்னன் மனைவி சுசீலையுடன் அரசு புரிந்து வந்தான். அவனுக்கு புரு, வீரன், சுஷேணன் என்று

மூன்று புத்திரர்களும் உத்தமை என்ற ஒரு பெண்ணும் இருந்தார்கள். அரசன் உத்தமைமீது அளவு கடந்த அன்பு கொண்டிருந்தான். அவன் உத்தராயண புண்ணியகாலத்தில் தன் மனைவி மக்களுடனும் மந்திரி மற்றுமுள்ள பிரஜைகளுடனும் தாமிரபர்ணியில் ஸ்நானம் செய்யச் சென்றான். கரைபுரண்டோடும் அந்நதியிலே பெண்ணோடு அரசன் ஸ்நானம் செய்ய இறங்க திடீரென நதிவரண்டு மணற்பரப்பாய் காட்டியளித்தது. அதில் மன்னனும் அவன் மகளும் மறைந்தனர். இதைக்கண்ட ராஜபுத்திரர்களும் மனைவியரும் மக்களும், மந்திரிகளும் கதறிக் கண்கலங்கி நின்றனர். புரு என்ற ராஜகுமாரன் தந்தை மீண்டும் வருமளவும் ஆகாரமின்றி இங்கேயே தங்குவேன் என்று உறுதி பூண்டு அந்நதிக்கரையில் தங்கலானான். அப்பொழுது சுநீதி என்ற மந்திரி "நேற்று விடியற்காலையில் நான் ஒரு கனவு கண்டேன். அதில் நீண்டு வளர்ந்த அற்புதமான ஒரு பெண் அரசனையும் உத்தமாவையும் கழுத்தில் கயிற்றினால் கட்டி ஆசனத்தினின்றும் இழுத்துத்தள்ளி மறைந்தாள். தேகத்தில் ஒரு மாறுதலும் தெரியவில்லை. உடனே மீண்டும் அரசன் மலர்ந்த முகத்துடன் வந்து அரியணை ஏறக்கண்டேன்" ஆதலால் இப்பொழுது துக்கம் நேரிடினும் இது பின்பு சந்தோஷமாகவே முடியும். ஆதலால் அரசன் மீண்டும் வருவான் என உறுதி கூறவே, ராஜபத்னிகளை அந்தப்புரம் அனுப்பிவிட்டு ராஜபுத்திரன் மட்டும் அந் நதிக்கரையில் கவலையுற்றுக்கிடந்தான்.

இப்படி அரசன் வரவை எதிர்பார்த்துக்கொண்டு வீற்றிருக்கும் ராஜகுமாரன் முன்பு ஆகாச சாரியான ஒரு பிராமணன் வந்தான். உபசரிக்கப்பட்ட அவன் கூறத்தொடங்கினான். தங்கள் ஊராகிய மணலூரில் வாழ்ந்த மாதவ சர்மா என்ற பிராமணனுக்கும் ஸோமவல்லி என்பவளுக்கும் பிறந்தவன் நான். எனக்கு வலாஹகன் என்றுபெயர். நான் பிறந்ததும் தாயும், உபநயனம் செய்தபின் பிதாவும் லோகாந்தரம் எய்தனர். பின் மஹாகருணா மூர்த்தியான ஒரு ஆசாரியன் எனக்கு வேத வேதாங்கங்கள் கற்பித்து பிரம்ம வித்தையையும் அஷ்டாக்ஷர மஹாமந்திரத்தையும் உபதேசித்து இதை திருக்கண்ணபுரத்திலேயே சென்று அஷ்டாக்ஷர ஜபசித்திபெறுவாய் என்று அனுக்கிரஹித்தார். நானும் அதை அங்கு ஜபிக்க எனக்குப் பெருமாள் திருவருளால் ஆகாச கமனம் முதலிய பல சித்திகள் கிடைத்தன. நான் அங்கிருந்து கிளம்பி பல க்ஷேத்திரங்களையும் பல நதிகளையும் பல மஹான்களையும் தரிசித்துக்கொண்டு மேருவிலிருந்து வடதிசை கடந்து மீண்டும் திருக்கண்ணபுரம் சேவித்து தக்ஷிணதேச சஞ்சாரத்தில் ஆவல்கொண்டு தாம்பிரபரணி சென்றேன். ராமஸேதுவில் அமாவாசை ஸ்நானம் செய்ய விரும்பி அங்கே பலருடன் சென்றேன். அங்கு ஸேது தீர்த்தம் இல்லாதிருப்பது கண்டு வியப்புற்றேன். இதன் உண்மையறியும் பொருட்டு அகஸ்தியரைக்காண

மலய பர்வதம் சென்றேன். அங்கு அவரைக்காணுது வருந்திய எனக்கு, முனிசிஷ்யன் உபசாரங்கள் பலநல்கி ப்ரம்மலோகத்தி லிருந்து சீக்கிரம் அகஸ்தியர் வருவார் என்று கூறினுன். நான் தங்க மறுநாள் அகஸ்தியரும் வந்தார். அவர் என்னைக் கண்டு மகிழ்ந்து ஸர்வதீர்த்தங்களும் மறைந்ததின் காரணத்தை யாவருக்கும் விளக்கினுர்.

அகத்தியர் கூறியதாவது :—

நான் இங்கிருந்து புறப்பட்டு பிரம்மலோகம் சென்றேன். அங்கு ரிஷிகள் தேவதைகள் புடைசூழ பிரும்மா ஸத்யலோகத்தில் சபையில் வீற்றிருந்தார். அங்கு பிரம்மாவின் அனுமதிபெற்று எல்லா தீர்த்தங்களும் உருவம் பெற்று அங்கு வந்தனர், அவர்கள் "பிரபோ! உலகிலுள்ளவர்கள் எங்களிடம் ஸ்நாநம் செய்து தங்கள் பாபங்களைப் போக்கிக்கொள்ளுகிறுர்கள். அந்த பாபச்சுமையை எங்களால் பொறுக்க முடியவில்லை. அந்த பாபங்களை நாங்கள் எப்படிப் போக்கிக்கொள்ளுவோம்" என்று முறையிட்டனர். அதற்கு கிருஷ்ண க்ஷேத்திரத்தில் கிருஷ்ணுரணியத்தில் திருக்கண்ண புரம் என்றெரு புண்ணியத்தலம் இருக்கின்றது, அதில் உத்பலாவ தகம் என்ற திவ்ய விமானத்தில் மூவுலகின் முதல்வனும் ஸர்வலோக ஸாக்ஷியும், ஸர்வேசுவரனுமான சௌரிராஜப் பெருமாள் என் தந்தை அங்கு நித்யவாசம் செய்கிறுர். அந்த விமானத்திற்கு எதிரில் "நித்ய புஷ்கரிணி" என்ற ஸகல பாபங்களையும் போக்கும் ஒரு உத்தமமான புண்ணிய தீர்த்தம் இருக்கிறது, உங்களிடம் கிரஹண புண்ணிய காலம் தவிர மற்றய தினங்களில் இரவில் ஸ்நானம் செய்யக் கூடாது. ஆனுல் அந்த நித்ய புஷ்கரிணியில் பகல் சாயங்காலம் இரவு எந்த நேரத்திலும் ஸ்நானம் செய்யலாம் அதனுலும், மூழ்கி ஞலும், கேட்டாலும், நினைத்தாலும், ஜலத்தைச் சாப்பிட்டாலும், அது ஸகல பாபத்தையும் போக்கவல்லது. அதனுல்தான் இதற்கு நித்யபுஷ்கரிணி என்று பெயர் வந்தது.

இப்பொழுது உத்தராயணம். ஆகவே நீங்கள் எல்லோரும் அங்கு மூழ்கி பாபத்தைப் போக்கிக்கொள்ளுங்கள். உங்களுடைய ஒரு அமிசம் மட்டும் எப்பொழுதும் அந்த தீர்த்தத்திலேயே தங்கி யிருக்கட்டும். அதுவும் இதனுலேயும் நித்ய புஷ்கரிணி என்ற பெயர் பெறட்டும். ஒவ்வொரு உத்தராயணத்திலும் நீங்கள் அங்கு வந்து தங்குங்கள்" என்று பிரம்மா கூறினுர். உடன் மற்ற நதிகளும் சித்தசிரவசு அவன் பெண்ணுடன் கூடிய தாம்பரபர்ணியும் நித்ய புஷ்கரிணீ சென்றனர். அதில் ஸ்நானம் செய்து ஸகல ரிஷிகளுக் கும் நடுவில் வீற்றிருக்கும் ஸ்ரீ சௌரிராஜப் பெருமாளைக் கண்டு வணங்கினர். பெருமாள் "நீங்கள் எப்பொழுதும் உத்தராயணத்தில்

இங்கு தங்குங்கள். மற்ற தினங்களில் ஒரு அம்சத்தோடு மட்டும் இங்கிருங்கள். இங்கு உத்தராயணத்தில் ஸ்நானம் செய்பவன் பேறுபெற்றவனுய் நற்குலத்திலே பிறந்தவனுய் உலகம்போற்றும் புகழ்பெற்றவனுய் வாழ்வான். ரோகங்கள் நீங்கும். தொல்லைகள் தொலேயும். முன்னுள் உபவாசமிருந்து இரவில் தூங்காமல் "நாதாய சௌரயே நம:" என்றும், கேசவாதி 12 நாமாக்களைக் கூறிக்கொண்டும் ஸ்நானம் செய்வார் பெருவாழ்வுபெற்று மகிழ்வார். ஒரு வருஷம் தவருமல் அமாவாசையில் மூழ்கினல் பாவம் போகும். இரண்டு வருஷங்கள் ஸ்நானம் செய்தால் பெண்கள் மலடிகளேயாயினும் மகப்பேறு பெறுவர். மூன்று வருஷங்கள் ஸ்நானம் செய்தால் ஆரோக்யமும், நான்கு வருஷங்கள் செய்தால் பெரும்பேறும் ஐந்து வருஷங்கள் செய்தால் எல்லா பாக்யங்களும் ஆறு வருஷங்கள் செய்தால் செல்வமும் ஏழு வருஷங்கள் செய்தால் பேரரசும், எட்டு வருஷங்கள் செய்தால் அஞ்ஞான நிவர்த்தியும் ஒன்பது வருஷங்கள் செய்தரல் தேவராஜ்யமும் பத்து வருஷங்கள் செய்தால் பிரம்ம பதவியும், பதினெரு வருஷங்கள் செய்தால் மோக்ஷத்தையும் பெறுவர் என்று பெருமாள் கூறினர். அன்று முதல் எல்லாப் புண்ணிய தீர்த்தங்களும் அங்கு நித்யவாசம் செய்கின்றன. இதனுடைய தென்கரையில் கலிபுருஷன் கூடபெருமாளுடைய திவ்ய தேஜஸின் பிரபாவத்தினுலே ஒருவருக்கும் தீங்கு செய்யாது பெருமாளே வாழ்த்தி வணங்கிக்கொண்டு நித்யவாசம் செய்கிருன்." மற்றயுகங்களில் கிட்டாத பகவந் நாமாவின் கீர்த்தனமாத்திரத்தினுலே முக்தியளிக்கும் பெருமை கலிக்கு மாத்திரம் கிட்டியது. ஆகவேதான் புராணத்தில் இங்கு "கலி: ஸாது:" என்று குறிப்பிட்டிருக்கிருர்கள். இப்படி ஸகல தீர்த்தங்களும் பெருமாள் ஸந்நிதியில் இருக்கும்போது சித்த சிரவஸையும் அவன் பெண் உத்தமையையும் அங்கிருக்கக்கண்டேன் என்று எனக்கு அகஸ்தியர் கூறினுர. 50 கோல் நீளமும் 32 கோல் அகலமும் கொண்ட இந்த நித்ய புஷ்கரிணீ ஸ்ரீ சௌரிராஜப்பெருமாள் சந்நிதியின் முன் கம்பீரமாய் தோற்றம் அளிக்கிறது. ஆகவே கவலேயுருதீர். தங்கள் தந்தை நிச்சயம் இங்கு மீண்டும் வருவார் என்று கூறி வலாஹகன் மறைந்தான்.

## உத்தமையின் கல்யாணம்.

இராச குமாரர்களும் மற்றவர்களும் சந்தோஷத் தோடிருக்கும்போது சோழதேசத்தரசனின் தூதன் வந்தான். அவன் சித்த சிரவசு கூறி அனுப்பியபடி செய்தி சொன்னுன்— "நான் பெண்ணுடன் பிரம்மாவின் உத்திரவுப்படி இங்கு தங்கியிருக்கிறேன். உடன் நீங்கள் யாவரும் புறப்பட்டு சோழதேசம் வந்து சேருங்கள்" என்று, உடன்யாவரும் புறப்பட்டுச்சென்றனர். அங்கு சித்தசிரவக

யாவரையும கண்டு மகிழ்ந்து, முன்பு நிகழ்ந்தவற்றைக்கூறி நான் தீர்த்தங்களுடன் சௌரிராஜப் பெருமாளை வணங்கினேன். அவர் என்னை குசலப்பிரச்னம் செய்தார். என்னை அழைத்து வந்ததற் காகத் தீர்த்தங்களிடமும் அன்பு காட்டினர். என் பக்கலில் நிற்கும் உத்தமையைக்கண்டு, சூரிய வமிசத்திலே சூரனும் கல்வி கேள்வி களிலே சிறந்தவனும் என் திருப்பணி புரிபவனும் என் பக்தனுமான இச்சோழதேசத்தரசன் ஆவர்தனுக்கு ஒரு புதல்வன் இருக்கிறன். அவன் "சுஸங்கன்" என்ற என் பெயரை வைத்துக்கொண்டிருப்ப தால் எனக்கு அவனிடம் பிரியம் அதிகம். நீயும் என் பக்தனுய் இருப்பதால் அவனுக்கு அழகின் திருவுருவமான இந்தப்பெண்ணைக் கொடு" என்று கூறினர் எனக்கூறி முடித்தான். இதை யாவரும் ஆமோதித்தனர். நல்ல நக்ஷத்திரராதிகளுடன் கூடிய மங்களகர மான முகூர்த்தத்தில் ஸுஸங்கனுக்கும் உத்தமாவுக்கும் பெருமாளே முன்னின்று திருமணத்தை மிகவும் சிறப்பாக நடத்திவைத்தார். பின் பாண்டியனுக்கு அஷ்டாக்ஷர மஹாமந்திரத்தையும் உபதேசித் தருளினர். மகிழ்ந்த பரண்டியன் பெருமாளுக்கு ரத்தினம் பதித்த ஸ்வர்ணத்தாலான ஒரு சிறந்த தோள்வளையை அர்பணித்து அணியச் செய்து அக்காட்சியை கண்டு களித்தான். அவன் தன் புடைசூழ பாண்டிய நாட்டை அடைந்தான்.

சுஸங்கனும் ஸார்வபௌமனுய் திருவருளால் திகழ்ந்தான். அங்கலோபம் இருந்தாலும் இந்த க்ஷேத்திரத்தில் அஷ்டாக்ஷரம் சித்தியைக் கொடுக்கிறது. விஷ்ணுபக்தியையும் ஞானவிருத்தியையும் அளிக்கிறது. உத்பலாவதகத்தில் அமர்ந்த ஸ்ரீ சௌரிராஜனை அஷ்டா க்ஷரத்தால் த்யானம் ஜபம் செய்தால் பெரும்பயனை அளிக்கும். ஒவ்வொருயுகங்களிலும் சூராதிகளிடம் பகவான் அவதாரம் செய் கிறர். ஆனல் எல்லா அவதாரங்களுக்கும் இந்த சௌரிராஜப் பெருமாளே மூலகாரணமானவர். அவர் இந்த க்ஷேத்திரத்தில் நித்தம் விளங்குகிறர். ஆகவே இத்தலத்தின் பெருமை உரைக்கக் கூடியதோ!

## "உத்பலாவதகம்"

இந்திரனுக்கு நண்பன், அதனல் விமானத்தில் ஆகாயத்தில் செல்லும் வசதிபெற்று "உபரிசரன்" என்று புகழப்பெற்றவன் வசு என்ற பெயர் கொண்டான் ஒரு மன்னன் மண்ணுலகை ஆண்டு வந்தான். ஒரு சமயம் தேவேந்திரன் இவனைக்கண்டு "நான் பூமி யில் யாகம் செய்ய விரும்புகிறேன். அந்த வேளையில் தேவலோகத் திற்கு ஊறு விளைவிக்காமல் கொடிய அசுரர்களை நீதடிந்து தேவர் களைக் காத்து எனது யாகத்தை பூர்த்திசெய்து தரவேண்டும்" எனக் கேட்டுக்கொள்ள வசுவும் சரி என்று ஏற்றுக்கொண்டான். இந் திரன் தீக்ஷிதனுய் யாகம் செய்யும்போது, ரிஷிகள், துர்நிமித்தங்கள்

உண்டாகின்றன. எங்கள் இதயம் நடுக்குகின்றன. இடக்கண்கள் துடிக்கின்றன. இந்த கோரமான துர்நிமித்தங்கள் உன் யாகத் திற்குக்குந்தகம் விளைவிக்கும். பஞ்யேசுவரனுகிய பகவான் ஸ்ரீமந் நாராயணனை சரணடை என்றனர். அண்டினவர் அல்லலெல்லாம் தீர்த்து மங்களம் நல்கும் நாராயணனின் திவ்யத்திருவடிகளை மனத் தால் நினைத்து வழிபட்டான். இந்த ஸமயம் தேவதூதன் ஒருவன் வந்து, அசுரரால் தேவர்கள் நலிவதையும் தேவராஜ்யம் பறிபோவ தையும் கூற, இந்திரன் மௌனமாயிருக்க, வசு பிரதிக்ஞை செய்து அசுரவதத்திற்குப் புறப்பட்டான். அங்கு சம்சப்தகர்களு டனும் நிவாதகவசர்களுடனும் பெரும் போர்புரிந்தான். அவர்களை வெல்ல வழிகாணுத வசு பிருசாசுவ மஹர்ஷியாலே கூறப்பட்ட தான வீணுகாத பிறரால் தடுக்க முடியாத நாராயணுஸ்திரத்தைவிட அவர்கள் தொலைந்தனர். பின் வசு தேவராஜ்யத்தை நிலைநிறுத்தி, தேவர்களுக்கு ஆறுதல் கூறி சில நாட்கள் அங்கு தங்கி பின் தேவ சேனையுடன் இந்திரனைக்காண பூலோகம் எய்தினுள். இந்திர விமா னத்திலே இறங்கும் வசுவிற்கு தாகமும் பசியும் அதிகமாயின. சேனையை நிறுத்திவிட்டு அங்கு ஆத்மஞானம் பெற்ற பெரியோர் மனம்போல தெளிந்த தண்ணீர் நிறைந்த ஸரஸைக் கண்டும் அதன் பக்கத்திலே தினைக்கதிர்களைக் கண்டும் மகிழ்வெய்தி பசிகளைய தினை களைக் கொய்ய ஆரம்பித்தான். அங்கு குடிசையிலுள்ள பதினறு வயது வாலிபன் "இந்தத் தினை தின்பதற்கு கந்ததல்ல. விணேசாஹ ஸம் செய்யாதே." என்று தடுத்தும் வசு களைந்தான். மீண்டும் தடுக்க கோபங்கொண்ட பூபாலன் வில்லெடுக்க, காவலாளியும் வில்லாளி யாக மாறினன். அவன் மீது வசு விட்ட இருபத்தொரு பாணங் களும் வாலிபன் மார்மீதணிந்த மாலையின் மணிமீதுபட்டு இழிந் தொழிந்தன. அரசன் விட்ட மற்ற பாணங்களையும் விளையாட்டாய் அவன் துணித்தது கண்ட வசு, நாராயணு ஸ்திரத்தினல் அவன் வலி தொலைக்க நினைத்து அதை தியானித்தான். அவன் கண்மூடித் தியானிக்கும்போது மனக்கண்ணிலே எழில்பொருந்திய புஷ்கரிணீ; அதைச்சுற்றியடர்ந்த தினைப்புலம்; இதனிடையே காவலாளியின் சிறுகுடில்; அங்கே வில்லைத்தாங்கி நிற்கும் வீர இளைஞன்; இவை களோடு அவனேடு சண்டையிடும் தன்னையும் சக்தியற்றதன் பரி வாரங்களையும் கண்டு வியப்புற்று, நான் நாராயணு ஸ்திரத்தை தியா னிக்க இவ்விளைஞன் அங்கே தென்படுவானேன் என எண்ணி வில்லை யும் அம்பையும் கீழேபோட்டு சிரத்தின் மீது கைகூப்பிக்கொண்டு அவனிடம் சென்றுன். கைகூப்பித் தன்னைச்சாரும் அந்த அரச னுக்கு அருள்வழங்குவான்போல் அவ்விளைஞனும் வில்லைப்போட்டு நின்றுன். வசுவோ, "நீர் நாராயணனே. கையில் ஏந்தியிருந்த வில் லும் சார்ங்கமே. செந்தாமரை போன்ற நீண்ட தங்கள் கண்களே இதற்குச்சான்று கூறுகின்றன. நீர் யார்?" என்று வினவினன். நீ களைத்திருக்கிருய். இந்தப் புஷ்கரிணியில் ஸ்நானம் செய்து வா. பின்

என் உண்மை உருவத்தைக் காண்பாய் என அந்த இளைஞன் கூற, அவ்வாறே செய்து வசு வந்து பார்க்க அங்கு தினைப்புனத்தின் தினைகளை மஹர்ஷிகளாகவும், அவர்களுக்கிடையில் உத்பலாவதகம் என்ற மாபெரும் விமானத்தையும் அதலிடையில் ஆயிரம் சூரியர்களின் ஒளிபொருந்தியவரும் அருள் கொழிக்கும் புன்சிரிப்புத்திகழ் முகமும் அகன்ற நீண்ட கண்களும் வனமாலை திகழும் தனி மார்பும் சந்திரன் போன்ற தண்மையும்கொண்ட ஸ்ரீ சௌரிராஜப் பெருமாளையும் பார்த்து வீழ்ந்து வணங்கினன். பெருமாளும் அருள்பொழிந்து "வீரியம் காண்பிப்பது அரசர்க்குகந்ததே ஆயினும் இந்த க்ஷேத்திரத்தில் எதையும் களையாதே. இங்கு தினையாய் இருந்தோர் யாவரும் என்னை வழிபட்டுத் தவமிருந்ததினுல் இளைத்து, மாம்ஸமற்ற தேஹம் கொண்ட உத்பலர் என்ற மஹர்ஷிகளே. இவர்களைக் காப்பவனுன நான் விரும்பியமரும் விமானமே இந்த உத்பலாவதகம் என்ற விமானம். இங்கமர்ந்து தான் நான் இந்த மஹர்ஷிகளை ஸம்ரக்ஷணம் செய்து கொண்டிருக்கிறேன். இங்கு எந்தவிதமான உபத்திரவமும் செய்யக்கூடாது. என்னிடம் வேண்டிய வரங்கேள்" எனக்கூறினர். வசுவும் நான் தங்களோடு யுத்தம் செய்த அபராதத்தை மன்னிக்கவேண்டும். இத்திருக்கண்ணபுரத்தில் கால்யோசனை நீளமும் அகலமும் கொண்ட ஒரு நகரம் நிர்மாணிக்க விரும்புகிறேன். அனுக்கிரஹித்து அருளவேண்டும் என விண்ணப்பிக்க, பெருமாளும் ஏற்றருளினர்.

## திருக்கண்ணபுரம்.

நம்மாழ்வாரால் "வெள்ளியேய்ந்த மதிள்சூழ் திருக்கண்ணபுரம்" "வானையுந்து மதிள் சூழ் திருக்கண்ணபுரம்" "அரணமைந்த மதிள் சூழ் திருக்கண்ணபுரம்" நன்பொனேய்ந்த மதிள் சூழ் திருக்கண்ணபுரம்" "மணிபொனேய்ந்த மதிள்சூழ் திருக்கண்ணபுரம்" "கல்லிலேய்ந்த மதிள் சூழ் திருக்கண்ணபுரம்" ஏத்திப் புகழும் பெருமைகொண்ட இந்த நகரம் வசு மன்னன் பெருமாளது பிரசாதத்தால் விசுவகர்மாவைக்கொண்டு நிர்மாணம் செய்தான். பற்பல மண்டபங்களாலும் பல மாளிகைகளாலும் நிறைந்ததும் வேதவித்துக்களான பிராமணர்களாலும் மஹர்ஷிகளாலும் வாசம் செய்யப்பட்டதும் இந்நகரத்தை 10 வீதிகள் கொண்டதாக மிக அழகாகச் செய்தான். இந்நகரம் 700 கோல் அகலமும் 800 கோல் அளவு நீளமும் கொண்டதாகும். இதனிடையில் கோபுரமண்டபங்களோடு கூடியதாயும் ஐந்து ஆபரணங்களால் அழகுற்றதாயும் ஐந்து மஞ்சங்கள் கொண்டதாயும் மணிமயமான சுவர்கள் நிறைந்ததாயும் உள்ள திருக்கோவிலையும் சமைத்தான்.

## "பூதாவடம் தீர்த்தம்"

ஒரு சமயம் அத்ரிபுத்திரனுன சந்திரனை ராஜயக்ஷ்மா என்ற நோய் தக்ஷசாபத்தாலே பிடித்துக்கொண்டது. பின் அந்த சந்திரன்

பாற்கடல் கடையுங்கால் வெளிவந்தபோதும், மெலிந்த நீண்ட கருத்தமேனியும், கோரக்கண்ணும், தித்திப்பல்லும் நீண்டகழுத்தும் கொண்ட அந்த ராக்ஷயக்ஷ்மா மீண்டும் பிடித்துக்கொண்டது. அதனல் தேய்ந்து வரும் சந்திரனைக்கண்ட ஸமுத்திரராஜன் ஸ்ரீ சௌரிராஜப் பெருமானை வேண்ட பெருமாளும் தன் பக்கத்திலிருந்த ஒரு பூதத்தைக்கூப்பிட்டு தக்ஷசாபம் இந்த ஜன்மாவில் தொடரக்கூடாது. ஆகவே நீ சென்று அந்த வியாதியைத்தொலைத்து சந்திரனை என்னிடம் அழைத்துவா என்றுர். அந்த பூதமும் ராஜயஷ்மாவை பிடித்துக் கொண்டு சந்திரனை பெருமாளிடம் அழைத்துக்கொண்டுவர மற்ற வியாதிகளெல்லாம் வந்து எங்கள் அரசனுன இவனை விடுதலைசெய்ய வேண்டும் என மிகவும் மன்ருட ராஜயக்ஷ்மாவை விட்டுவிட்டது. சந்திரனைக்கண்ட பெருமாள் மிகமகிழ்ந்து ஜலபுஷ்பமான சந்திரனை சம்புவுக்குக் கொடுக்க அதை அவர் சிரத்தில் அணிந்து சந்திர சேகரர் ஆனுர்.

அப்போது ராஜயக்ஷ்மா என்னுல் அடக்கப்பட்ட கதையை யார் நினைக்கின்றனரோ அவர்களுக்கு வியாதிவராது. என்னிடமிருந்து உண்டான இந்த தீர்த்தத்தில் யார் மூழ்குகின்றனரோ அல்லது நீர் அருந்துகின்றனரோ, அவர்களுக்கு வியாதிபீடையே உண்டாகாது என்று பூதம் உறுதி கூறிற்று. ஆகவே இந்தத்தீர்த்தத்தில் மூழ்குவோருக்கு வியாதி பீடை தொலையும் — இந்த தீர்த்தம் சௌரிராஜப்பெருமாளது தென்பக்கத்தில் 50 கோல் தூரத்திலே 7 கோலளவு நீளமும் அகலமும் கொண்டு திகழ்கிறது

## அனந்தபில தீர்த்தம்.

சௌரிராஜருக்கு மேற்குப்புறத்திலே ஒரு தீர்த்தமிருக்கிறது. இது அனந்தன் என்ற ஸர்பராஜன் தன் இனங்களோடு இதன் வழியே வந்து பெருமானை வழிபட்டுச் சென்றதால் இப்பெயர் பெற்றது. இந்த தீர்த்தம் மூழ்குவோருக்கு ஸகல ஐசுவரியமும் சித்திக்கும், அவர் எல்லா சித்தியும் பெற்று வாழ்வர். அனந்த சூழ்ந்து கொள்ளப்பட்டிருப்பதாலும் இதற்கு அனந்தபிலம் என்ற பெயர் வந்தது, இதன் நீளம் ஏழு கோல்.

## "முக்தாகரம்"

விமானத்தின் வடபுறத்திலே 5 கோலளவு கொண்ட "முக்தாகரம்" என்ற ஒரு தீர்த்தம் இருக்கிறது. ஸ்வர்க்கம் பூமீ பாதாளம் என்ற மூவுலகிலும் செல்லும் திறன்பெற்ற வசு என்ற மன்னன் பாதாளத்தினின்றும் இதன்வழியாக வந்து ஸ்ரீ சௌரிராஜப் பெருமானை வழிபட்டான் இதன் கரையில் பல மகாஷிகள் நித்தம் தவம் செய்கின்றனர். இதன் ஜலத்தை சாப்பிட்ட அளவிலேயே முக்தி கிடைக்கும், இதன் அளது 5 கோல்.

## "வசுவிற்குச் சாபமும் பெருமாள் திருவருளும்"

முன் வர்ணிக்கப்பட்ட வசு மன்னன் திருக்கண்ண புரத்தை நிர்மாணம் செய்துவிட்டு நல்ல விளை நிலங்களையும் அழகுமிக்க நகைகளையும் விலையுயர்ந்த வஸ்திரங்களையும் வாசனைத்திரவியங்களையும் நூற்றுக்கணக்கான வாகனங்களையும் கொடுத்து விட்டு ஊர்செல்ல ஆயத்தமாய் பெருமாளிடம் விடைபெற்று நின்றான்.

பெருமாள் — "அரசே! நீ என்னிடம் மட்டும் விடைபெற்று விஷ்வக்சேனரிடம் விடைபெறாதிருந்தனை. ஆகவே இது உனக்கு நன்மை பயக்காது. பிராம்மணர்கள் சாபத்தினால் உனக்குப்பாதாள வாசம் கிடைக்கப்போகிறது. ஆயினும் அஞ்சவேண்டாம். அந்த சாபம் பல்லாண்டு பூமியில் ராஜ்யம் செய்து ஜன்மாவின் கடைசிக் காலத்தில் கிட்டும். நானே வந்து உன்னைப் பாதாளத்தில் காக்கிறேன் என்று கூறினார். இது கேட்டு அவன் பயந்து பெருமாளையும் விஷ்வர்சேனரையும் வணங்கி விடைபெற்று, இந்திரன் யாகம் செய்துகொண்டிருக்கும் தலம் சென்றான். அங்கு யூபத்தில் கட்டப்பட்ட பசுக்கள் கதற, கருணைகொண்ட ரிஷிகள் மாவினால் செய்யப்பட்ட பசுக்களின் புரோடாசமே யஞ்ஞத்திற்கு உகந்தவையாகும், இப்பசுக்களைக் கொல்லவேண்டாம் என, தேவர்கள் பசுவினின்றும் கிடைத்த புரோடாசமே எங்களுக்கு உகந்தவை என விவாதம் நடந்து கொண்டிருந்தது. வசுவைக்கண்ட தேவர்களும் ரிஷிகளும் இதில் எது உத்தமம்? என்று கேட்டனர். வசுவோ தேவர்கள் பக்ஷத்தை ஆதரித்தால் ரிஷிகள் சபிப்பர். ரிஷிகள் கக்ஷியை ஆதரித்தாலே தேவர் கோபத்திற்கு ஆளாகவேண்டும். ஆயினும் பிராம்மண சாபம் வரும் என்ற பகவான் வாக்கு பலிதமாகட்டும் என்று எண்ணி தேவர்கள் கக்ஷியை ஆதரிக்க ரிஷிகள் கோபித்து "நீ பாதாளம் செல்வாயாக" எனச் சபித்தனர். தேவர்கள் பரிந்து இந்த சாபம் கடைசிக் காலத்தில் பலிக்கும் என்றனர். அதனால் பூலோகத்தில் வசு பல்லாண்டு அரசு செலுத்திவர பூர்வ வைரத்தால் தேவலோகத்தில் இவனிடம் தோற்று ஓடிய அசுரர்கள் ஒன்று திரண்டு இவனைப் பாதாளந்திற்குத் தூக்கிச்சென்றனர். அங்கு அசுரர்கள் எல்லா ஆயுதத்தாலும் இவனைக்கொல்ல நினைத்தும் சமீபம் அணுக முடியாது தவித்தனர். அவர்கள் உடன் தங்கள் குருவான சுக்கிராசாரியாரிடம் இந்த சமாசாரத்தைச் சொல்ல, அவர் "சிவன் பெரிய விஷ்ணுபக்தன். விஷ்ணு பக்தியினாலும் விஷ்ணு கவசம் தரித்திருப்பதனாலும் இவனை நீங்கள் அணுகமுடியாது. ஆகவே இவனுக்கு விஷ்ணுபக்தி குறையும் உபாயத்தைக் கையாண்டு பின் சொல்லுங்கள்" என்றார்.

அசுரர்களும் சுக்கிரன் வாக்கைக் கருதி வசுவிடம் பிராம்மண வேஷத்திலே வர அவனும் அவர்களை விஷ்ணு ரூபமாக வரித்து

பகவானின் குணகணங்களை வாயாரத்துதித்து நிற்க; அசுரர்கள் அவன் விஷ்ணுபக்தியைக் குறைக்க நாஸ்திக வாதத்தை ஏற்று பெருமாளை இகழ ஆரம்பித்தனர். அரசே! விஷ்ணுவைத் துதிக் காதீர். அசுரர்களைக் கண்டு பயந்தோடுபவர் யஞ்ஞத்தில் நாங்கள் கொடுக்கும் ஹவிஸ்ஸை சாப்பிட்டு வாழ்பவர். அமிர்தமதனத்தில் அசுரர்களை ஜயிக்கச் சத்தியற்று மோஹினி வேஷம் போட்டுக் கொண்டவர். அசுரர்களால் வேதம் கவரப்பட்டபோது மீனய் அவதாரம் செய்தவர். மாவலியை வஞ்சிக்க மாயாமானவராய் வந்தனர். ராமாவதாரத்தில் பல இன்னலுக்கு ஆளானவர். கிருஷ்ணவதாரத்தில் காலயவனனுக்குப் பயந்தோடியவர் கடையில் வேடன் பாணத்தால் உயிர் துறந்தவர். அந்த விஷ்ணுவிடம் பக்தி செய்து பயன் என்ன! என்று கூறி அவன் பக்தியை குறைக்க முயற்சித்தனர். வசு இது கேட்டு மனம் நொந்து "இவாகளுக்கு நல்ல புத்தியைக்கொடு" என்று பெருமானை வேண்ட, பெருமாளும் பாசுவதனுகிய வசுவின் வேண்டுகோளுக்கிணங்கி அவர்களுக்கும் நல்ல ஞானத்தைக்கொடுக்க அதனுல் அவர்கள் முக்திபெற்றனர்.

வசு பகவானை நினைத்தபடியே பாதாளத்தில் அமர்ந்திருக்க, பெரிய திருவடியைவிட்டு வசுவை அழைத்துவர பகவான் உத்திர விட அவரும் அவ்வாறே பாதாளம் சென்று வசுவைத் தூக்கிக் கொண்டு வந்து முக்தாகர தீர்த்தத்தின் மேற்குப் பக்கத்தில் நிறுத்தி பெருமாளிடம் பெரிய திருவடி விண்ணப்பித்து நிற்க, இதுகேட்டு மகிழ்ந்து பெருமாள் தானே அவன் பக்கம் வந்தார். முக்தாகரத் தின் கரையில் கிழக்கு முகமாக தன்னையே நினைத்து நிற்கும் வசு வுக்கு பகவான் தன் திவ்ய தரிசனத்தைத் தந்தார். வரம் பெற்றுக் கொள் என வசுவிடம் பகவான்கூற—தங்கள் திவ்யத்திருவுருவை மீண்டும் காண விழைகிறேன் என வசு கூற, பகவானும் அவ்வாறே காட்ட அவனும் தன் மயமாகத் த்யானம் செய்து அவர் ஸாமீப் பியத்தை அடைந்தான். இந்த தீர்த்தத்தைப் பார்த்த மாத்திரத் திலேயே இஹபரஸம்பத்துக்கள் பெறுவர். பெருமாள் அருளால் ஸர்வலோகங்களுக்கும் ஜயம் உண்டாகும்.

## ஸ்ரீ பத்மினீ திருமணம்

முன்னெருகால் நற்குணங்கள் நிறைந்த மித்திரன் என்ற சேரகுல மன்னன், பாண்டிய வமிசத்தில் உதித்த பேரரசனுன தர்மாரண்யன் ஈன்றெடுத்த பேரெழிற்செல்வி பிரபை என்பவளை மணந்து அவளிடம் ரூபலக்ஷணங்கள் நிறைந்த சுந்தரீ என்ற பெண் ணைப்பெற்முன். அவளுக்கேற்ற புருஷனைப் பற்றி சிந்தையுற்றிருக் கும் மன்னனிடம் பிரபாஸர் என்ற அம்மன்னின்பு ரோஹிதர் "சூரிய வமிசத்து அரசனுன வசு மஹாராஜாவே இவளுக்கு ஏற்ற

மணாளன்" எனக்கூற, அதன்படியே வசுவை அழைத்துவந்து அவனுக்கு சுந்தரியை மணம் முடித்தான். சுந்தரியை மணந்து ராஜ்ய பரிபாலனம் செய்துவரும் வசுவுக்கு பல்லாண்டுகள் சென்றும் பிள்ளை பிறக்காதுபோக தன் புரோஹிதரான வசிஷ்டரை அடைந்து பிள்ளைக்குறை தீர வழிகாட்டுமாறு வேண்டினன். அவர் முன் த்ரேதாயுகத்தில் சுசீலன் சுநிர்மலா என்ற பிராம்மண தம்பதிகளுக்கு நீ செய்த தீங்கின் காரணமாக அந்த பிராம்மண பத்னீயின் சாபத்தால் உனக்குப் பிள்ளை பிறக்கவில்லை. ஆகையால் நீ நாராயணப்ரீதியை விரும்பி அசுவமேதமும் பின் புத்திரகாம இஷ்டியும் செய்தால் உனக்குப் பிள்ளை நிச்சயம் பிறக்கும் என்றார். அவனும் அதன்படியே அசுவமேதம் முடித்து புத்திரகாமேஷ்டியாகம் செய்துகொண்டிருக்கும்போது வேதியினின்றும் எழுந்த ஒரு திவ்யரூபம் பெற்ற வருணன் புதல்வன் "இரண்டு செங்கழுநீர் புஷ்பங்களை வசுவினிடம் கொடுத்து இவ்விரண்டையும் உன் மனைவிக்குக்கொடு. அழகிய குணம்நிறைந்த ஒரு பெண்ணும் ஒரு பிள்ளையும் பிறப்பார்கள்" என்று கூறிக்கொடுத்து மறைந்தான். அம்மலர்களை முகர்ந்த வசுவின் மனைவிக்கு சித்திரை மாதத்தில் ரோஹிணி நக்ஷத்திரத்தில் சுப முகூர்த்தத்தில் ஒரு பெண்ணும் பின் ஒரு புத்திரனும் பிறந்தார்கள். பெண்ணுக்கு பத்மினீ என்றும் பிள்ளைக்கு பத்மகன் என்றும் மன்னன் பெயரிட்டு மிகவும் பிரியமாக வளர்த்து வந்தான். பத்மினீ ஸ்ரீ சௌரிராஜப்பெருமாள் மீது அளவுகடந்த காதல் கொண்டவளாய் வளர்ந்து வந்தாள். தக்க வயதுவந்தவுடன் பெண்ணை "நீ யாரை மணக்க விரும்புகிறாய் என்று பத்மினீயை வசு வினவ, ஸ்ரீ சௌரிராஜரைத்தவிர வேறுயாரையும் நான் பதியாக வரிக்கமாட்டேன். என்று கூறிவிட்டாள்.

இதன் பின்தான் இந்திரனுக்காக வசு ஸ்வர்க்கம் சென்று அசுரரை அழித்து மீண்டும் கண்ணபுரத்திலே, தினைப்புலம் காக்கும் காவலாளியின் உருக்கொண்ட பெருமாளோடு சண்டையிட்டுப் பின் உண்மை தெரிந்து பெருமாளுக்குத் திருக்கோயில் கட்டிவைத்து வணங்கிநின்றான். அன்பு கூர்ந்து பெருமாளும் வசுவை நோக்கி வேண்டிய வரம் பெற்றுக்கொள் என அருள, வசு "தேவாதிதேவ! எனக்கு ஒரு பெண் இருக்கிறாள். பிறந்தது முதல் அவள் உனக்காகவே வாழ்கிறாள். என் வமிசம் கீர்த்தியுடன் உலகில் தழைத்தோங்க தாங்கள் அவள் திருக்கரம் பற்றி அவளைத் திருமணம் செய்துகொள்ளவேண்டும்" என்று வேண்டினன். பகவான் அவன் விருப்பத்தைப் பூர்த்திசெய்வதாக வாக்களித்தார். உடன் வசு நாட்டிற்கு தூது அனுப்பி மனைவிமக்கள் மந்திரிகள் பிரஜைகள் புரோஹிதர் முதலானோர் திருக்கண்ணபுரம் வந்து சேர்ந்தனர். அரசன் ஆணையால் அவன் வீரர்கள் கண்ணபுரத்தை மிக அழகாக வாழைத் தோரணங்கள் முதலிய மங்களகரமான அலங்காரங்களால் மிளிரச்

செய்தனர். திவ்யமங்கள மூர்த்தியாய் விளங்கும் ஸ்ரீ சௌரிராஜப் பெருமாளுக்கு வைகாசி மீ பௌர்ணமியும் அனுராதா நக்ஷத்திரமும் திங்கள்கிழமையும் கூடிய ஒரு சுபதினத்தில் ஸ்ரீயின் அம்சமாகிய ஸ்ரீ பத்மினியை

இயமேஷா மமஸுதா த்வதர்ஹா ரூபசாலினீ|
தஸ்மாத் க்ருஹாண பகவன் பாணிம் பத்ம்யா: மஹாபுஜ||

எனக்கூறி முறைப்படி தாரைவார்த்து திருக்கரத்திலே அளித்தான். பெருமாளும் அவளைத் திருமணம்செய்துகொண்டு தன் திரு மார்பிலே திகழவைத்துக்கொண்டார். இதனால் ஒளியினால் ஓங்கும் சூரியன்போல் நின்றபெருமாள் வசுவுக்கு அஷ்டாக்ஷர மஹாமந்திரத்தை உபதேசித்து, நான் இங்கு நித்யவாசம் பண்ணுகிறேன் என்றருளினார். இந்த கல்யாண சரிதத்தை கேட்போரும் படிப்போரும் உலகில் பாபமற்றவராய் பவித்திரமான கீர்த்திபெற்று வாழ்வர்.

## திருமணிக்கட்டிலே தோள்வளை.

முன்பு மலைகளின் இறக்கைகளை வெட்டும் இந்திரனைக்கண்டு பயந்து ஹிமவானின் புத்திரனான கருடபர்வதம் கிருஷ்ண க்ஷேத்திரத்தின் ஸமீபம் கடலில் மூழ்கிநிற்க இந்திரனும் க்ஷேத்ரமஹிமையால் ஒன்றும் செய்யாவிட கடலில் நிம்மதியாய் இருந்தான். பகவானின் திருவருளால் காப்பாற்றப்பட்டோம் என்ற எண்ணம்மிக, பெருமாளை நோக்கித்தவம் செய்தான். அந்த பர்வதத்திற்கு பகவான் அஷ்டாக்ஷரத்தை உபதேசித்தார். அஷ்டாக்ஷரஜபத்தால் பலகாலம் பகவானைப் ப்ரீதிசெய்த அம்மலைக்கு மாகமாச உத்ஸவத்தில் மகத்தன்று பகவான் காட்சிதந்துவரம்பெற அனுமதியளித்தார். அப்பர்வதமும் விகடாக்ஷன் என்ற அசுரனைக் கொல்லும்போது சக்ரதாரியாக நின்ற தங்கள் திருவுருவக்கோலத்தை காட்டியருளவேண்டும் எனப் பிரார்த்திக்க பகவானும் அவ்வாறே காட்சியளித்தார். அந்த ஸ்வரூபத்தை அடிமுதல் முடிவரைக் கண்டு மகிழ்ந்தது அம்மலை. அப்படி கவனித்துப் பார்த்துக்கொண்டு வரும்போது தோளை அலங்கரிக்க வேண்டிய தோள்வளை மணிக்கட்டிலே இருக்கக்கண்டு வியப்புற்று பெருமாளைப்பார்த்து "எந்தையே! இது என்ன விசித்திரமாயிருக்கிறது. ஆபரணத்தை இடம் மாற்றி அணிந்து கொண்டிருக்கிறீர்களே" இதில் ஏதேனும் விசேஷம் உண்டோ! என்று கருடபர்வதம் கேட்டான். முன்னொருசமயம் சித்தசிரவசு என்ற பாண்டிய மன்னனின் குமாரியான உத்தமாவுக்கும் சோழதேசத்தரசனாகிய ஸுஸங்கனுக்கும் நாம் திருமணம் முடித்துவைத்தோம். அதனால் மகிழ்ந்த என் பக்தனாகிய சித்தசிரவசு என்பான் எனக்கு இத்தோள்வளைதனை அளித்தான். நானும் அதை அணிய விரும்பி

கையில் மணிக்கட்டுவரை அதை மாட்டிக்கொண்டிருக்க அவ்வரசன் "ஜகந்நாத! இந்த ஆபரணம் தங்கள் திருமணிக்கட்டில் இருந்தாலே யே மிக அழகாய் இருக்கிறது. இந்தத்தோற்றம் என் கண்களுக்கு விருந்தளிக்கிறது" என்று விண்ணபப்பித்துக் கொண்டான். நானும் அவன் வேண்டுகோளுக்கிணங்கி தோள்வளையை மணிக்கட்டிலே யே தரித்திருக்கிறேன் என்றும், இதைக் கவனித்துக் காண்பவன் தேஜஸ்பெற்று என் உலகடைவான் என்றும் பர்வதத்திடம் கூறினர் ஸ்ரீ சௌரிராஜப்பெருமாள்.

## "அஷ்டாக்ஷர மந்திரஸ்வரூபியே ஸ்ரீ சௌரிராஜப்பெருமாள்"

அஷ்டாக்ஷரமந்திரத்தை ஜபிக்காமலே அதன் பலனை அடைய வேறு ஏதேனும் வழி உண்டா! என கருடபர்வதம் வினவ— ஸ்ரீரங்கம், வேங்கடமலை, ஸ்ரீமுஷ்ணம், வானமாமலை, ஸாலக்கிராமம், புஷ்கரம், நரநாராயணு சிரமம், நைமிசம் என்ற முக்திதரும் மாபெரும் புண்ணிய க்ஷேத்திரங்களிலே முறையே அஷ்டாக்ஷரத்தின் ஒவ்வொரு அக்ஷரஸ்வரூபியாய் நான் இருந்துகொண்டு மோக்ஷமளிக்கிறேன். ஸப்த புண்ணியங்கள்கொண்ட இத்திருக்கண்ணபுரத்திலே மட்டும் அஷ்டாக்ஷரத்தின் ஸர்வாக்ஷர ஸ்வரூபியாய் நான் காட்சி கொடுத்து பக்தர்களை அனுக்கிரகிக்கிறேன். இங்கு பூதானம், வீட்டுக்கான உபகரணங்கள், ரதங்கள், கன்யை, பசுக்கள், போஜனம், தண்ணீர் இவைகளை நித்யபுஷ்கரிணியில் ஸ்நானம் செய்து தானம் அளிப்பவர்களுக்கு அஷ்டாக்ஷர ஜபத்தின் பலன் கிடைக்கும். மஹாமகத்தில் பிரகாரப் பிரதக்ஷிணம் செய்வோர், 16 முறை நித்ய புஷ்கரிணியை வலம் வருவோர், உத்பலாவதக விமானத்தை 108 முறை பிரதக்ஷிணம் செய்வோர், நித்ய புஷ்கரிணீதீரத்தில் துளசிவனம் வைத்து வளர்ப்போர், இதுபோன்ற புண்ணியங்கள் பல செய்வோர் அஷ்டாக்ஷரமந்திர ஜபபலனை எளிதிலே அடைவர், என்று கூறி பெருமாள் மறைந்தருளினர்.

இந்த க்ஷேத்திரத்தின் மாஹாத்மியத்தை படிப்போர் கேட்போர் செல்வம், ஆரோக்யம், புத்திர பௌத்திரர் விருத்தி இவை பெற்று பல்லாண்டு இம் மானிலத்திலே மாட்சிபெற்று வாழ்வர்.

---

ஓம் ஸ்ரீ நாதாய சௌரயே நம:

ஸ்ரீ விஷ்வக்சேனுய நம:

—0—

இம்பீரியல் பிரஸ், உடுமலைப்பேட்டை.

தர்மகர்த்தாக்கள் :

ஸ்ரீ G. கோவிந்தசாமி நாயுடு.

ஸ்ரீ S. சௌரிராஜய்யங்கார், B. A.

ஸ்ரீ C. கிருஷ்ணசாமி முதலியார்.

நிர்வாக அதிகாரி :

ஸ்ரீ P. கந்தசாமி, B. Sc.

இப்புஸ்தகம் கிடைக்குமிடம்:—

ஸ்ரீ சௌரிராஜப் பெருமாள் தேவஸ்தானம்,

திருக்கண்ணபுரம் P. O.,

நன்னிலம் தாலூக்கா,

தஞ்சாவூர் ஜில்லா.



திரு [illegible]